இது, புறச்சமயத்தானொருவன் நாலுதண்டிகளுடன் இராமானுஜரிடத்தில் வந்து ஸ்ரீவைஷ்ணவ மதத்தைப்பற்றி வாதஞ்செய்து, வாதத்தில் தோற்றுப்பின் அவரிடம் உபதேசம்பெற்று ஸ்ரீவைஷ்ணவ மதத்தனுசி வாழ்ந்தான் என்னும் விஷயத்தைத் தெரிவிப்பது. எழுதினவர் பெயர் முதலியன தெரியவில்லை. பிரதி பூர்த்தியுடையது.

(g) சரமோபாயதாத்பர்யம்.

CARAMŌPĀYATĀTPARYAM.

Foll. 132*a*—136*a*. Fol. 136*b* is left blank.

A treatise purporting to prove that grace of the Ācārya or one's spiritual preceptor conduces to salvation. From the Sanskrit stanza in the beginning, it is made out that the author is Dēvarāyar.

Incomplete.

Beginning:

சரமோபாயதாத்பர்யம் யதீந்த்ரவிஷயகம் பராக் |
யஸ்ஸோயம்ஸர்வதோ தேவராஜாக்யம் ஸமாஶ்ரித: ||

ஸகல ப்ரதிபந்தகமான ஸம்ஸாரத்தில் சாவி பிறந்து ஸகலஸ்மரணாரவிந்த ப்ராப்தி ரூபமான மோக்ஷத்தி லிச்சை

பிறந்தவதிகாரிக்கு விஶிஷ்டமாக வரவேண்டுமான எம்பெருமானு ரபிமானத்திலே யொதுங்கி கஷ்ய வ்யவஸ்தி திஶேஷயுடையவனு யிருக்கவேணும்.

End:

வ்யாபாணகாரெ உதாஹரி—அதாவது ஸித்தவ்யவஸ்தைகள் உபாய மல்லாமையாலேயிதேஹதேகமாகக் கடாக்ஷித்து நோக்கிக்கொண்டு போரும். வாகோரணிகராய் ஸதாவாயமான எம்பெருமானுர் இவன் நம்முடையவன் என்று அபிமானிக்குமந்த வபிமானமே இவனுக்கு ஸம்ஸாரோத்தார(க)மென்றபடி. சூவாயஶிரஸிரோநமே உத்தாரக மென்று ஸ்லோகத்தில் முடிவிலே சுகூர்த்தமாக ஆளவந்தா ரருளிச் செய்தாரிறே. இந்த ஆசார்யாபிமானந்தான். அங்கமோ, ஸ்வதந்த் ரோபாயமோவென்ன உபயமுமாயிருக்கும். எங்ஙனே யென்னில்:—

இந்த சூவாயஶிரஸிரோநந்தான் ஹோரா விஷ்ராவ ர—ஞெவைபான வ்யவஸ்தி கஶிஜ்ஞாந ஸித்தகளா . . . .

(த-பு.)—

இது வைஷ்ணவ மதத்தில் தென்கலை ஸம்பிரதாயத்தைச் சேர்ந்தது. ஆசார்யாபிமானமே சிஷ்யனுக்கு மோக்ஷத்தை அளிக்க வல்லதெனக் கூறுவது. இயற்றியவர் தேவராஜர் என்பது முதலிலுள்ள வடமொழி சுலோகத்தால் தெரிகின்றது. இந்தப் பிரதியில் இது முற்றுப்பெறவில்லை.

(h) சடகோபரந்தாதி.

SAṬAKŌPARANDĀDI.

Foll. 137*a*—152*a*. Fol. 152*b* is left blank.

A centum of stanzas in praise of Nammāḻvār. The authorship of the work is attributed to Kambar. The work has been printed.

Complete.

Beginning:

கம்பரந்தாதி காப்பு.

நஞ்சடகோபனைப் பாடினையோவென்று நம்பெருமாள்
விஞ்சியவ(ா)தரத்தாற் கேட்டருள விரைந்துரைத்த
செஞ்சொலந்தாதி கவித்துறை நூறுந் தெரியும் வண்ண
நெஞ்சடியேற்கருள் வேதந்தமிழ் செய்த நின்மலனே.

* * * *

வேதத்தின் முன்செல்க மெய்யுணர்ந்தோர் விரிஞ்சன் முதலோர்
கோத[த்த](ற்ற) ஞானக்கொழுந்து முன்செல்க குணங்கடந்த
போதக் கடலெங்க டென்குரு கூர்ப்புனிதன் கவியோர்
பாதத்தின் முன்செல்லுமோ தொல்லை மூலப் பரஞ்சுடரே. (க)

End:

மனையும் பெருஞ்செல்வமு மக்களு மற்றை வாழ்வுந் தன்னை
நினையும் பதமென நின்றபிரான் குருகூர் நிமலன்
புனையுந் தமிழ்க் கவியாலிருணீங்கிப் பொருள் விளங்கி
வினையுந்திரி வுற்றனகுற்ற நீங்கின வேதங்களே. (௩)

Colophon:

நம்மாழ்வார் விஷயமாக நம்பெருமாள் நியமனத்தாலே செய்த கம்பனந்தாதி முற்றிற்று.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

(கு-பு.)—

இது நம்மாழ்வார் விஷயமானது. நூறு கட்டளைக் கலித்துறைகளாலாயது. கம்பர் இதனை யியற்றியதாகச் சொல்லப்படுகிறது. செய்யுள்நடை நன்றாயிருக்கிறது. இது அச்சிடப்பட்டிருக்கின்றது. இந்தப் பிரதியில் இது பூர்த்தியாயிருக்கிறது.

(i) கைசிகபுராணம்.

KAIŚIKAPURĀṆAM.

Foll. 153*a*—155*a*. Fol. 155*b* is left blank.

Contains a small portion of the Kaiśikapurāṇa together with the commentary of Bhaṭṭar.

Incomplete.

(கு-பு.)—

இதில் கைசிக புராணத்தின் முதற்சிறுபாகம் பட்டர் வியாக்கியானத்துடனுள்ளது. இது அச்சிடப்பெற்றிருக்கிறது. இதன்பின் இறுதியேட்டில் தனிப்பாடலொன்று எழுதப்பட்டிருக்கிறது.

R. No. 419.

Palm-leaf. 13⅝ × 1 inches. Foll. 225. Lines, 6—7 in a Page. Tamil. Much injured.

Presented in 1919-20 by Rāmakṛṣṇa Bhaṭṭācāriyar of Chittur, Cochin State

பழமொழித்திரட்டு.

PAḶAMOḶITTIRAṬṬU.

A collection of over 5,000 proverbial and pithy sayings, some of which are vulgar and obscene. From the introductory stanzas in the beginning it is made out that the collection is based upon the proverbs contained in Sanskrit, Telugu, Tamil, Malayalam and Kanarese languages and that the author is Aṇṇāvayyar of Varāhanagar.

Beginning :

பலவ[ளி](ழி)த் துறைகள் தன்னில் பாங்குடன் நினைத்துச் சேர்த்து(ப்),
ப[ள](ழ)மொ[ளி](ழி) வ[ள](ழ)க்கச் சொல்லைப் பரிவுடன் மகிழ்ந்தே
[செப்ப
வழிவகையாகவிந்த வராக மாநகரில் வாழும்
இனிமொழியுமையாள் பெற்ற [கெ]கணபதி காப் த்தானே. (க)

பழமொழி பெரியோர் சொன்ன பழக்கமாம் வழக்கச் சொல்லை
நளினமாய் அண்ணுவய்யன் நயத்துடன் இணக்கிச் சேர்த்துப்
பிழையற உரைப்பதற்குப் பிரியமாய் உகந்து கேட்டுக்
களரியில் விளங்கும் வண்ணம் கருத்துடன் உரைத்திட்டோரே. (உ).
திருவுற்றவராக நகர்க் கிருஷ்ணமூர்த்தி திருவுளத்தால் வழக்கச்சொல்
[நாலு பாஷை
கருவுற்ற வந்தணரிலண்ணுவையன் கற்பனையாய் அகார முதல்
[வகாரமட்டும்
பரிவுற்ற பலவகைச் சொல் பொறுக்கிச் சேர்த்துப் பண்புடனே பழ
[மொழிகள் பகர்ந்தே செப்பத்
திருவுற்ற வகஸ்தியகிரி வெங்கடேசர் தாளிணைகள் அனுதினமும் வாழ்
[த்துவேனே. (ங)

வடமொழி தமிழந்த வடுகு கன்னடம்
தடமலையாள [மைதளநயாநத] மென்றைந்துபாஷையில்
இடமதாய்ச் சேர்த்திய வ[ள](ழ)க்கச் சொல்தனை
அ(ன)டவுடன் படிப்பவர் அறிவுள்ளாளரே. (ச)
பல(ர்) மொழி வழக்கச் சொல்லைப் பாங்குடன் பிரசங்கமாக
உலகினில் விளங்கவேண்டி உண்மையாய் அண்ணுவையன்
நலமதாய்ப் பொறுக்கிச் சேர்த்து நாடியே செப்புதற்கு
மலைமகள் உமையாள் பெற்ற மதகிரி காப்பதாமே. (ரு)

மஹாமஹொபாநமஃ

அத்திமுகக் கணபதியை அனுதினமும் தொழுது போற்று.
அவ்வையார் சொல்லுக்கு அழிவு ஒரு நா[ளது]ளு(ம்) வ[றதயி]
[(ருவதி)ல்லை.
அன்னமிட்டவர் அரங்கேறுவார், கன்னமிட்டவர் கழுவேறுவார்.
அணுவுக்கு அணு, மகாமேருவுக்குச் சமானமாயிருக்கு.
அகல உழுகிறதை ஆழ உழு.
அஃகஞ் சுருங்க [அ](எ)ல்லாஞ் சுருங்கும்.
[அ](ஐ)ங்காதம் போனாலுந் தன்பாவம் தன்னோடே.

End :

தரித்திரப்பட்டு, அலைச்சல்பட்டு, விசனப்பட்டு,
கஷ்டப்பட்டு, வெகுரோ[ரதை](தனை)ப்பட்டு, துன்
ப[டை](ப்)பட்டு, துக்கப்பட்டு, மனசு இடப்பட்டு,
[பி](பு)றப்பட்டு வழிப்பட்டுவந்தேன். ஆகப்பத்துப்

பட்டுக்கொண்டுவந்தேன். இப்போ(து) இந்தப் பத்துப்
பட்டும்போய் இந்த வ்ரூ ஒரு சேப்புப்பட்டுக்[கு]
(கெ்ா)டுத்[தயி](ரு)ருக்[கா](கிறு)ர். தேவராஜது
ஸந்தோஷப்பட்டு, ஆஸ்சுய்ப்பட்டு வனவந்ப்பட்டு

* * * *

(கு-பு.)—

இதில் உலக வழக்கிலுள்ள சுமார் 5,000 பழமொழிகள் தொகுத்து எழுதப்பெற்றுள்ளன. அவற்றுள் மிகத் தாழ்ந்தனவும் இடக்கருமானவை பல. வடமொழி, தமிழ், வடுகு, கன்னடம், மலேயாளம் ஆகிய ஐந்து பாஷைகளிலும் ஆங்காங்கு வழங்குவனவற்றைப் பொறுக்கி வராகதகர் அண்ணவையரென்பவர் இவ்வாறு தொகுத்தாரென்று, முதலிலுள்ள 4 செய்யுட்களாற் றெரிகிறது. பிரதியில் பிழைகள் மிகுதி. மிகச்சிதிலம். இடையிடையே சில ஏடுகள் எழுதாமல் விடப்பட்டிருக்கின்றன அச்சிடப்பெற்றுள்ள பழமொழியகராதிக்கும் இதற்கும் பல வேறுபாடுகளுண்டு.

R. No. 420.

Palm-leaf. 17 × 1¼ inches. Foll. 369. Lines, 8 in a page. Tamil. Injured.

Presented in 1919-20 by M.R.Ry. Rāmakṛṣṇa Bhaṭṭācāriyar of Chittur, Cochin State.

இராமாயணவசனம்.
IRĀMĀYAṆAVACANAM

A narration of the story of Rāma in prose with connecting poetical stanzas here and there. In the beginning of the work, the previous incarnations of god Viṣṇu and the efficacy of reading and hearing the story of Rāma are described in 39 stanzas.

Complete.

Beginning:

அவிக்கினமஸ்து.

விஷு வருஷ சித்திரை மீ ௳ வெள்ளிக்கிழமையும், தி[றி](ரு)தி[கை](யை)யும் அனுஷ நட்சத்திரமுங்கூடிய சுபதினத்தில், உதிச்சு சாமத்துக்கு ரிஷப லக்கினத்தில் பன்னிமடை அண்ணஜோசியர் மகன் சீனச்சாமன் நடை ஸ்ரீராமாயணம் எழுதப்பெற்றது. செயமங்களம்.

நாடிய பொருள் (. . . .) கூறுவோர்க்கே.
ஆதிசேசவனுல் வேதனனந்த [ஞ](நா)ரணன் சீர்பாதம்
நீதியாலிரண்டு போதும் நெஞ்சினிற் பதித்துப்போற்றி
மாதவர் முனிவர்தேவர் வ . . . . . . ர் நோக்கிச்செய்த
பாதகந் தம்மைக்கொல்லப் பத்தவ தாரமானார்.

* * * *

இந்த ராமகதை யி[நிட](னுடைய) சாக[ற](ர)த்தில் சொ[ர](ற்)பி[ளை](ழை) எ[ளு](ழு)த்துக்குற்றம் உண்டாயிருந்தாலும் அறிவுடைய ம[கு](கா)த்மாக்கள் த[ற்](ர்)மகதை ஆகையிஞலே யிக[ளா](ழா)மல் கைக்கொள்வ ரென்பதிஞலே என்புன்சொல்லிஞலும் உரையெ[ளு](ழு)தினே னென்றவாறு.

இப்பால் ஸ்ரீவைகுண்டமூர்த்தியான விஷ்[ட]ணு திருப்பாற்கடலில் அனந்தசயனமேற் பள்ளிகொண்டிருக்குங் காலத்தில் நடந்[து](த) கிருத்தியஞ் சொல்லத்துடங்கிய தென்போல வென்னில் ;

End :

ல[ஷ](ட்)சுமணரை அழைத்து வாராய் தம்பி, என்னுடைய அப்பணே அன்றியிலே [யி](எ)மதூதரை என்பக்கலுக்கு விடலாமோ நீயென் வசன மறுத்தபோதே உன்னிருப்பிடமே ம[ஆகு](வன)மாய்ப்போ வென்று சொல்லி ஸ்ரீராமரும் நறுமலர் மந்தாரம் முல்லை நவர[ற்றி](த்தி)னப் பொன்விமானத்தி லேறிக்கொண்டு அந்தச் சரீரத்தோடே போமளவில் ஸ்ரீராமர் வருகிறார் என்று தெய்வலோகத்தையும் அலங்காரஞ்செய்து தேவர்கள் முனிவர்கள் எ[து](தி)ர்கொண்டு கூட்டிப்போய் ஸ்ரீராமரிருந்த அச்செடுத்துப் பூலோகத்தில் ராசாவாய் ராவணவேட்டை ஆடின தோஷமும் இந்தச் சுபாவ[க]ம் போம்படிக்குந் தெய்வ கங்கையிலே மூழ்கிவிட்ட டியிஞலே ஸ்ரீராமர் வேறே நிறமாய் தெய்வநாயகராய்த் தோன்றக்கண்டு தேவர்கள், முனிவர்கள், அஷ்டவசுக்கள், சந்திர சூரியர், [வி](பி)ருமா, ருத்திரர் மற்றுமுண்டானவர்களெல்லாஞ் செயசெய போற்றியென்று புஷ்பமலர் கொண்டர்ச்சித்து வேண்டிய [ஷசோ](தோ)த்திரஞ் செய்தும் [ஆ] அலங்காரத்துடனே ஸ்ரீ வைகுந்தம் சேர்(ர்)ந்தா ரென்றவாறு.

* * * *

(விருத்தம்)

பாற்[க]கடல் ஆதிராமர்க் கடிமையாய்ப் படிந்தபேர்கள்
ஏற்கவே குகன்மாருதி எரிகதிர்ப்பதல்வன் அங்கி
ஊ[ர்](க்)கமாய் வீடணன் சர்ம்டவருற்றவர் பெற்றதன்மை
தீர்க்கமாம் ஸ்ரீராமகாதை[ச்] சிறப்புடன் கேட்போர்க்கெல்லாம்.

The scribe adds :

[வெ](வி)யஞூ உத்தராயணகாலம் [ச](சி)ர ருதுவில் பங்குனிமீ எஉ ஞாயிற்றுக்கிழமையும் பஞ்சமியும் அனுஷ நட்சத்திரமும் வச்சிரநாம யோகமும் தைதலவாகரணமும் பெற்ற சுபதினத்தில் சூரிய உதயத்துக்கு மீனலக்கினத்தில் பன்னிமடை அண்ணுசோசியர் புத்திரன் சீனசசாமு, செங்காளிபாளையம் தொப்பையண்ண பிள்ளை எழுதின மேல்[ப்]பாடம் பார்த்து எழுதின நடை ராமாயணம் [எழு தி]முடிந்தது. முற்றும்.

சம்பூர்ணம்.

ஸ்ரீராமசகாயம்.

(த-பு.)—

இதில் இராமசரிதம் முற்றும் வசன நடையிலிருக்கிறது. விஷயங்கள் விரிவாகக் கூறப்பட்டிருக்கின்றன. முதலிரண்டேடுகளில் இஃதெழுதினோர்

பெயர் முதலியனவும், 'நாடிய பொருள் கைகூடும்' என்னும் கம்பராமாயணச் செய்யுளும் எழுதப்பட்டிருக்கின்றன. நூலின் தொடக்கத்தில், திருமாலின் அவதாரங்களுள் இராமாவதாரத்திற்கு முந்தின அவதாரங்களின் வரலாறுகளையும், இராம கதையைப் படித்தல், கேட்டல் முதலியவற்றா லெய்தும் பயன்களையும் கூறும் 39 செய்யுட்கள் உள. பின்பு பெரும்பாலும் வசனமும் இடையிடையே சில விடங்களில் விருத்தப்பாவுமாக அமைந்துளது. நடை சாதாரணமானது. இதனை யியற்றியவர் பெயர் முதலியன விளங்கவில்லை. இஃது அச்சிடப்படவில்லை.

R. No. 421.

Palm-leaf. 17 × 1⅝ inches. Foll. 100. Lines, 9 in a page. Tamil and Grantha. Fair.

Presented in 1919-20 by Alarmēlmaṅgammaṅgār, wife of Govindācāriyar, Mēlattirumāligai of Tiruvāymolippiḷḷai, Alwar-tirunagari.

ஸ்ரீவசனபூஷணவ்யாக்யானம்.
ŚRĪVACANABHŪṢAṆAVYĀKHYĀNAM.

An exhaustive commentary on the Śrīvacanabhūṣaṇa, described under No. 49(c) of the Triennial Catalogue of MSS., Vol. I. It is different from the commentary of Varavaramuni and is attributed by some to his Guru, Tiruvāymolippiḷḷai. A statement made in the MS. before the beginning of the work is in support of this view.

Complete.

Beginning:

ஸ்ரீவசனபூஷணத்துக்கு(த்) திருவாய்மொழிப் பிள்ளை அருளிச்செய்த வியாக்யானம். திருவாய்மொழிப் பிள்ளை திருமாளிகை பொன்னப்பங்காரது.

நமஃ ஸ்ரீஶைலநாதாய குந்தீநகரஜந்மநே |
ப்ரஸாதலப்தபரமப்ராப்யகைங்கர்யஶாலிநே ||
ஸ்வாமிநே தேஶிகேந்த்ராய தேவராஜபதாஶ்ரயஃ |
ஸதோஷபூஷாப்ரபந்நஸ்ய ஸ்தோத்ரஸ்தோத்ராஸநாய ||

பிள்ளை லோகாசார்யர் திருவடிகளே சரணம்.

திருவாய்மொழிப் பிள்ளை திருவடிகளே சரணம்.

ஶ்ரிய:பதியாய் அவாப்த ஸமஸ்தகாமனாய் ஸமஸ்த கல்யாண குணாத்மகனான ஸர்வேஶ்வரன் தன் நிர்ஹேதுக க்ருபையாலே . . . தத்வஹித புருஷார்த்தங்கள் ஒருவர்க்கும் அவகாஹித்தறிய வரிதாகையாலே தத்வ ஜ்ஞாந ஸம்பந்நரான நம் ஆசார்யர்கள் அருளிச்செய்த வசன ஶ்ரேஷ்டங்க

ளாலே அலங்கிருதமான ஆவர்த்த விசேஷங்களை(ப்) பிள்ளை தம் பரமகிரு பையாலே இவ்வசன பூஷண ப்ரபந்தமுகேந அருளிச்செய்கிறார் :—வேதார்த் தம் அறுதியிடுவது ஸ்மிருதிதிஹாஸ புராணங்களாலே. இத்தால் இப்பிரபந்த ப்ரதிபாத்யங்களான ஸகல விசேஷங்களுக்கெல்லாம் ப்ரதிபாதக ப்ரமாணம் ஸர்வ விப்ர ஸம்ஹிதா வேதார்த்த ஸம்ஹார ஸஹிதமான வேதமென்னுமிடம் உபக்ரமத்திலே 'உளன்சுடர்மிகுசுருதியுள்' என்று பரமாசார்யரான ஆழ்வார் அருளிச் செய்கையாலும் . . . . . இவரும் வேதார்த்த மறுதியிடுவதென்று உபகரமித்து அருளிச் செய்கிறார். வேதார்த்தம் அறுதியிடுவது—ப்ரமேய ஸாரஸங்க்ரஹரூபமான நிகில வேதவேதார்த்த தாத்பர்ய நிர்ணயம் பண்ணுவது.

End:

இந்த மகாவிஸ்வாஸ ஜ்ஞானத்தைப் பிறப்பித்த வநந்தரம் இவனுக்குப் பரபக்தி பரஜ்ஞான பரமபக்திகளென்ன, தத்வஜ்ஞாந ஸாக்ஷாத்கார ஸர்வ ஸாத்ய ப்ராப்தி என்றும் 'அந்தமில் பேரின்பத்தடியரோ டிருந்தமை' யென் னும் சொல்லுகிறபடியே நிரதிசயா நந்த ரூபமான ப்ராப்யாநுபவ மென்ன, அவ்வநுபவ ஜநித ப்ரீதிகாரிதமாய் ஸர்வதேச ஸர்வகால ஸர்வாவஸ்தோசித மான ஸர்வப்ரகார பரிபூர்ண கைங்கர்யமென்ன, ஏவம் விதமான ஸாத்யத்தின் மாக்கும் என்று, முதலிலே புருஷகார வைபவமும், உபாயவைபவமும் என்று தொடங்கி உபபாதித்த உபாயயாதாத்மியத்தையும், தத்பல சேஷத்தையும், இவ்வளவாக விஸ்தார விஸ்தரமாம்படி யருளிச்செய்து தலைக்கட்டினார்.

பிள்ளை திருவடிகளே சரணம்.

ஸாரகாருண்யகம் ஸர்வஜ்ஞம்
ஸாரதேஹஸுந்தரம் விசேஷாம்ருதம் ||
வசநபூஷண வேதவேதாந்தகம்
வசநபூஷண கிங்கரோஸ்ம்யஹம் ||

ஸ்ரீமந்நிகமாந்தம் ஸதேவேஸ்யாந்தாவிர்பாவயா |
ஸதேவஷாவர்ப்பஸ்ய ஸ்வாத்மநா யோகதா ஸாதநாய ||

Colophon:

திருவாய் மொழிப்பிள்ளை திருவடிகளே சரணம்.

[யி](இ)தில் குறையை வானமாமலை ஆத்தான் ஸ்ரீநிவாஸய்யங்கார் [யெ](எ)ழுதி முடித்தார். ஸ்ரீஸ்ரீ.

(கு-பு.)—

இவ்வுரை நூல் மூவருடத்திய காட்லாக்கின் 49 (c) நம்பரில் வந்துள்ள ஸ்ரீவசனபூஷண மென்னும் நூலின் விரிவுரை. மணவாளமாமுனிக ளியற்றி யுள்ள உரையினும் இது வேறானது. இவ்வுரை யாசிரியர் மணவாளமாமுனி களின் ஆசார்யராகிய திருவாய்மொழிப் பிள்ளை யென்பர் சிலர். இந்நூலின் தலைப்பில் எழுதப்பட்டுள்ள வாக்கியம் இதற்கு ஆதாரமாகின்றது.

R. No. 422.

Palm-leaf. 16½ × 1½ inches. Foll. 46. Lines, 8 in a page. Tamil. Good.

Presented in 1919-20 by Alarmēlmaṅgammaṅgār, wife of Gōvindācāriyar, Mēlattirumāḷikai of Tiruvāymoḻippiḷḷai, Alwartirunagari.

(a) நூற்றெட்டுத்திருப்பதிக்கலித்துறை.
NŪṞṞEṬṬUTTIRUPPADIKKALITTUṞAI.

Foll. 1a—16b.

Complete.

A poem in praise of the 108 admittedly holy shrines dedicated to the worship of god Viṣṇu. The name of the author is not known.

Beginning:

நூற்றெட்டுத் திருப்பதிக் கலித்துறை.

சீரேற்ற செஞ்சொல்மறைத் தமிழ்செய்து தண்டென்குருகை
யூரேறென வந்தருள் சடகோபனை யுற்றுநிதம்
பா(ே)ரதனிற் றொழுதாற்றும வாளன் செம்பங்கயத்தாள்
மார்(ே)ப(ய)மருந் திருமால்பதி பாடவருமனனே.

சீரரங்கத்துறை நித்தர்தத்தச் சிரப்பத்து திர்த்த
வீரரங்கத்துறை தந்தபொற்ருளர் வெறித்துளபத்
தாரரங்கத்துறை போகியவேதியர் தாந்துதிக்கும்
பேரரங்கத்துறை யாகுமெய்போதும் பெருந்திருவே. (க)

End:

சிறப்பவருந் திருவாய்ப்பாடியிற் செல்வர் சேவடிவாய்
திறப்பவருப்பாவ ணங்கிநிற்போர் நெடுங்கண்ணிணை மா
ணிறப்பவரும்பவிழ் நீலமன்னூர்க் குற்றவின்பமெல்லாந்
துறப்பவரும்பதந் தந்தென்னை யாள்வர்தொழும் புகொண்டே.
(௱உ௰)

* * * *
* * * *

திருவரங்கம்பெருங் கோயிலுள் மாயவன் திங்களங்கத்
திருவரங்கம்புனை வோரிலையோா சென்று போற்றநின்ற
திருவரங்கம்பெற விற்குனித்தோன் பதஞ்சிந்திப்பதே
திருவரங்கம்பொரும் வெங்காலதூதரென்சீ ரெண்ணியே. (௱உ௮.)

Colophon:

நூற்றெட்டு(த்)திருப்பதிக் கலித்துறையந்தாதிக் கவி முற்றும். ஆழ்வார் திருவடிகளே சரணம், திருவாய்மொழிப்பிள்ளை திருவடிகளே சரணம்.

(கு-பு.)—

இந்நூல், ஆழ்வார்கள் பாடல்பெற்ற நூற்றெட்டு விஷ்ணு ஸ்தலங்கள் விஷயமாகவும் அங்கு எழுந்தருளியுள்ள விஷ்ணுவின் ஸ்தோத்திர ரூபமாக

வும் அமைந்துள்ளது. நடை நன்றாகவிருக்கிறது. இயற்றியவர் இன்னாரெனத் தெரியவில்லை. இந்தப் பிரதியில் முற்றுமிருக்கிறது.

(b) எதிராசரந்தாதி.

ETIRĀJARANDĀDI.

Foll. 17*a*—18*a*. Fol. 19 is blank.

Complete.

A eulogy in ten stanzas on Yatirāja or Rāmānuja, the leading exponent of the Viśiṣṭādvaita - Vēdānta: by Aḻagiyamaṇavāḷadāsar or Piḷḷaipperumāḷayyaṅgār.

Beginning:

எதி[ரு](ரா)சரந்தாதி.

பூமான்பிறந்துசிறந் ததுவேலை புவிபடைத்த
கோமான்பிறந்து சிறந்தது[ஞ](நா)ன்மறை கூடற்சங்க
[ஞ](நா)மான்பிறந்து சிறந்தது பண்டெதிராச னென்னுஞ்
சீமான்பிறந்து சரணாகதியுஞ் சிறந்ததுவே. (௧)

*　　*　　*　　*

*　　*　　*　　*

பின்னே [து](தொ)டரும் பிறவிப்பெரும்பிணிபோக்கும் வண்ண
மின்னேயிதற்கு மருந்தறிந்தே னிந்தமேதினியிற்
றன்னேரொருவரொவ்வா[ய](வ)திராசன் சரணமென்று
சொன்னே னறிந்திலையேமனமே யிந்தத்துக்கம் விட்டே. (௨)

End:

வையகத்தே தன்னை வள்ளலென் றேத்திலும் வாய்திறவாக்
கையகத்தேநின்று கண்குளிர்வீர் கருணாகரனை
மெய்யகத்தே வைத்தபூதூர் முனிதன் விரைமலர்த்தாள்
பொய்யகத்தேநிற்கிலு மகலாள் மணப்பூமகளே. (௯)

சந்தார்புயத் தெங்களாழ்வார் தமக்குந்த தியருக்கு
மந்தாதிபத்து மணவாளதாத னல[த்தி](ற்றி)யதால்
நந்தாதகுற்ற முண்டாகாதவர்க்கொரு நாய்கங்கைநீர்
தந்தாபந்தீ ரக்குடித்தாலுந் தீர்த்தத்தின் றாழ்வில்லையே. (௰)

Colophon:

பிள்ளைப் பெருமாளையங்கா ரருளிச் செய்தது.

(கு-பு.)—

இப்பதிகம் விசிஷ்டாத்வைத சித்தாந்தப் பிரவர்த்தகராகிய எதிராசரது தோத்திர ரூபமானது. திருவரங்கக் கலம்பகம் முதலிய அஷ்டப்ரபந்தங்களையுமியற்றிய திவ்விய கவி அழகியமணவாள தாசரென்னும் பிள்ளைப் பெருமாளையங்கார் இயற்றியதென்று இதன் 10-வது பாட்டில் "அந்தாதி பத்து மணவாள தாதனலற்றியதால்" என்பதால் தெரிகின்றது. செய்யுள் நடை நன்றாக இருக்கிறது. இந்தப் பிரதியில் முற்றுமிருக்கிறது.

(c) திருவரங்கத்தந்தாதியுரை.
TIRUVARAṄGATTANDĀDIYURAI.

Foll. 20a—46b.
Complete.
Same commentary as that described under No. 256 of the D.C.T. MSS., Vol. I, wherein see for end.

Beginning:

மணவாளரவிந்தை மார்நோக்கவிம்மை மறுமையின்மா
மணவாளர்தம் பதம்லாய்த்திடுங்கோ யிலில்வந்தவந்த
மணவாளர்பொற்றிருப் பாதாம்புயங்கட்குமாலையென
மணவாளர்சூடும் யமகவந்தாதியை வாசிமினே.

திருஞானமுத்திரை துணை.

முதற் பாட்டு.

திருவரங்காவென்பது, பெரிய பிராட்டியார் உள்ளுமனையாக நீங்காத மார்பை யுடையானே, பிரமதேவன் சேவிக்கவும், யாழ்த்தேவர் அவ்விடத்து விசுவசித்து இனிய சங்கீதம் பாடவும், சிறந்த கண்ணுறங்கா நின்ற சீரங்கத்தையுடையவனே, உன்னுடைய பூர்வ தாசனை எனக்குக் கிருபை பண்ண வெழுந்திருப்பாயாக. பெருமைக் காடையை விரும்பினேன்; உன்னிடத்திலே கைங்கர்யம் பண்ணுவதற்கென்றவாறு. திருவரங்கா உனக்குத் தொண்டு செய்வதற்கு வரங் காதலித்தேன், உன் பழவடியேற்கு அருள் செய்ய எழுந்திருவெனக் கூட்டுக. சிவனயன் சேவிக்கவும் என்க என்னும் நாம் வருவிக்கவும். கொள்வார்க்குக் கொடுப்பார் கொடுத்தல் இருந்து கொடுத்தல் வெகுமானமாகையால் எழுந்திரு என்றுரெனக் கூறுக.

ஓராதெழுதினே ஞயினு மொண்பொருளை
யாராய்ந்துகொள்வ தறிவுடையோர்—சீராய்ந்து
குற்றங்களைந்து குறைபெய்து வாசித்தல்
கற்றறிந்த மாந்தர் கடன்.

Colophon:

இது திருவாய்மொழிப் பிள்ளை திருமாளிகை ஸ்வாமி பெரிய திருவடிப் பிள்ளை உூஸன் திருமலாசாரியன் எடு.

(கு-பு)—

இந்நூல் டிஸ்கிரிப்டிவ் காட்லாக்கின் 256-வது நம்பர் பிரதியில் வந்துள்ளதே. அதில் 54 வது செய்யுள் தொடங்கியிருப்பதால் நூலின் முதற் செய்யுளும் உரையும் இங்கு எழுதப்பட்டன. இந்தப் பிரதியில் இந்நூல் முற்றுமிருக்கிறது.

R. No. 423.

Palm-leaf. 14 × 1½ inches. Foll. 21. Lines, 11 in a page. Tamil. Fair.

Presented in 1919-20 by M.R.Ry. A. Aḻagappa Ayyaṅgār Avargal, Vaḍakkurathavīdhi, Alwartirunagari.

(*a*) பராங்குசநாடகம்.

PARĀṄKUŚANĀṬAKAM.

Foll. 1*a*—20*b*.
Complete.

A drama embodying the birth of Nammaḻvār and his greatness as well as the greatness of the four works written by him, viz., the Tiruvāymoḻi, the Tiruviruttam, Tiruvāśiriyam, Tiruvantādi : by Śēṣakavi, a disciple of Kandāḍai Aṇṇan of Srirangam.

Beginning:

ஹரி: ஓம். ஶுபமஸ்து.

ஸ்ரீபராங்குஶசரித்ரம். ஆழ்வார் நாடகம்.

பருதிநிகரு[றை]தயமெனப் பார்புகழுந் திருப்புளிக்கீழ்
ப்பரிவாய்க்காரி
யொருபராங்குசசரிதைத் தண்டமிழாலனுதினமும்
பாடியாடத்

திருவளருங்குருகைமால் சேவடியை நினைந்து
தொழுஞ் சேஷநாதர்
வருநாதமுனிகருடன் மதுரகவி மலரடிகள்
காப்பதாமே.

முனிவனுமந்த மொழி தவறாமல்
மனமகிழ்ந்துரைக்க வந்து நம்மாழ்வார்
மாதவர் போற்றும் மாமறைத் தமிழை
நாதமா முனிக்கே நாலாயிர
முரைத் தலகோற்குரைத் திடுமென்னத்

திருத்தமாய் முனிவன் செப்பவிப்புவியோ
ரனுதினமுரைக்க வனுசந்தானமும்
மனமகிழ் பொற்றாண் மண்டபந்தனிலே
சேடப்புளியுந் திருமஞ்சனமும்

பாடுந்தமிழ்ப்பிர பந்தக் கோட்டிகளும்
தத்துவமு ரைக்கும் முத்திரைக்கையன்
எத்திசை புகழ நித்தியோத் ஸவமும்
உளங்களிகூர விளங்கனு தினமும்
நாகரிகமுகுந்தன் நம்மாழ்வா ராய்த்

திருவவதாரஞ் செய்திடுஞ் சரிதை
நாடகமாக நவின்றிடும் படிக்கே
பாடினேன் பெரியோர் பதத்துணை தொழுதே.

* * * *
* * * *

புன்னாகவராளி.

இங்குல கெங்கும் பொற்
பங்கயப்பதம் போற்றும்
நங்கையார் தோன்றினே[ள](ர).
குங்குமத்திலகமும் தங்கரேகை போற்றீட்டி(ப்)
பைங்கிளி மொழி[த்]திகழ் பெண்கள் கிரீடி-இங்கு.

விருத்தம்.

கருமுகிலாதிநாதர் கழலிணைதன்னைப் போ[த்தி](ற்றி)ப்
பரிவுடன் குருகைவாழும் பராங்குச நாடகத்தை
யுரைசெயத் தமிழ்[நா](ந) லிவ்வுலகினிற் பாடியாடப்
பரகதிபெற்ற வாழ்வார் பதி(ன்)மருங்காப்பதாமே.

காசினிபுகழரங்கக் கந்தாடையண்ணனுக்கே
தாசனென்றுரைக்குஞ் சேஷகவி னன்தண்டமிழாற்செய்து
வாசமாய்க்குருகைதன்னில் வாழ்பராங்குச சரித்திரம்
பேசநற் பெரியோரென் சொற்பிழைபொறுத்தருளுவீரே.

தொடையம்.

ஜயஸத்ஜநகாரண ! ஜயலோகஸம்ரக்ஷண !
ஜயஸம்ஸாரஸம்வாரண ! ஜயவகுளாபரண ! ஜயஜய.

ஜயஸ்ரீவல்லிகநந்த ! ஜயஜயஸ்ரீயோகஸ்ரீநந்த !
ஜயகுணநிலயநந்த ! ஜயகம்ஸநந்த ! ஜயஜய.

தெள்ளுமறைத் தமிழ்விசித்ர ! திருவிசாக நட்சத்ர !
வள்ளற் காரியருள்புத்ர ! மாதவ சரித்ர ! ஜயஜய.

மங்களம் மகிழ்மாறர்க்கு மங்களம்
நங்கைசுதாகரனுக்கு மங்களம். மங்களம்.

* * * * *
* * * * *

ஆதிநா[ல்] தரைப்பணிந்தே யரவத்திருப்புளிக்கீழ்
மாதவம்புரியுநம் மாழ்வாராய் வந்தவர்க்கு
மங்களம், மகிழ்மாறர்க்கு மங்களம்.

அகவல்.

அருள்மிக நிரம்புமகத்தியன் செந்தமிழ்ப்
பொருளுயர்ந் திலங்கும் பொதியமாமலையான்
வருகயல்தாவும் பொருநையாறுடையான்
பொழிமலர்த்தேன் சொரி வழுதிநன்னாடன்
திருவளர் கின்றதென் குருகைமாநகரான்

* * * * *
* * * * *

கொடையினிற் கன்னன் கொ[த்த](ற்ற)வன்காரி
தந்தபராங்குசன் சரித்திரந் தன்னைச்

செந்தமிழாலே செப்பு மாகமங்கள்

*   *   *   *

காரிநங்கையைக் கலியாணஞ் செய்து
பேரினிவிளங்கப் பிள்ளை யிறைசையால்
ஆதிநாத[ரை](ர்) பொன் னடியிணை போற்றத்
தீதிலா திருக்குந் திருக்குறுங் குடிமா
நாதனே புத்திரன் நல்குவனென்ன
மாதுடனேகி மாதவம் புரியவப்
போது நம்பியு மாகாசவாணியாய்
இப்பிறப்[பிறப்]பினிற் சே யில்லை யென்றுரைக்க
வாசனுந்தான் கேட் டா[த்து](ற்று) மப்பொழுது
நாகரிநம்பி நாமே யுமக்குப்
பிள்ளையுமாவோம் பெருமைசேர் மன்று
வுள்ளமுந்தான் மகிழ்ந் துவந்து செல்கென்னச்

*   *   *   *

கார்முகில்நம்பி கருணையால் நங்கை
கர்ப்பமுமாகிக் காதல னுதிக்க

*   *   *   *

அன்னைமுலைப்பா லருந்திலை மைந்த
னென்னவோ வென்றே யிருக்க வேழாநாள்
காப்பிடப்பிள்ளைமா ராப்புட னங்குக்,
குத்தவுங்காது குறத்தி மெய்க்குறியு
மு[த்த](ற்ற)தைச்சொல்ல வுகந்தாதி நாதன்
சன்னிதியதிற் சேப் தனைக் கொணர்ந்திடவும்
பன்னகப் புளிக்கீழ்ப் பராங்குசனிருக்க
வயித்தியர் வந்து சயித்தியவுட்டணஞ்
சொல்லவுமே நோ யில்லையென் றுரைக்கச்
சாத்திரக்காரர் பார்த்துச் சாதகமும்
திருப்புளியின் கீ ழிருப்பனென் றுரைக்க
மாதவம் புரியும் மதுரகவிக்கே

*   *   *   *

சேவையு மளிக்கத் திருக்கோளூரான்
ஆவலாய்வந்தே யடிபணிந் தேத்திச்
செத்தத்தின் வயி[த்தி](ற்றி)லே சிறியதுகிடந்தால்
எத்தைத்தின் றெங்கே யிருக்குமோவென்ன
வத்தைத்தான் தின்றே யங்[க](ங)னே கிடக்குமென்
றுத்தரஞ்சொல்ல வுகந்தந்த முனிவன்
வண்சடகோபன் வருமுறை யெல்லாம்
கண்களிகூரக் காரியர்க் களிக்கச்
செய்திடத்தாந் த[ட்](ம்)சேத்திர மேவ்
ஊமமுகில்வண்ணர் வைகுண்ட ரப்போ(து)
செந்தமிழ்ப் பிரபந்தஞ் செப்புமென் றுரைக்க
வந்துநூற் றெட்டு மால் தென்குருகைச்

சேடப்புளிக்கீழ்த் தேசிக ரெம்மைப்
பாடுமென் றுரைக்கப் பராங் குசனப்போ
தருமறைத் தமிழந் தாதி விருத்தந்
திருவாசிரியமு ந் திருவாய்மொழியு
முறைசெயப் பிரபந்த முலகோர்படிக்கப்
பாகதி பெறலால் பிரபந்தமு மிறக்கத்
திருவளர் விஷ்வக் சேனரையழைத்துத்
தரணியிற் பிரபந்தந் தானனிவிளங்க
வாரண முரைக்கு மந்தணராக
வீரநாராயணன் மேவு தலத்தில்
மாதவம்புரியும் நாதமாமுனியாய்த்
தரணியி லுதித்து வருகுவீரென்ன
நாதமாமுனிவரும் பேரதொரு மறையோன்
ஆராவமுதனை யருளுதயத்தில்
பாராயணஞ் செய் பிரபந்தந்தனிலா
யிரத்துளிப்பத்து முறைத்ததைக் கேட்டுக்
குருகையைநோக்கி வரவுமே முனிவன்
பரிவுடனந்தப் பராங்குச நம்பித்
திரமாய்க் கண்ணிநுண் சிறுத்தாம் [பன்னீ](பினை நீ)ர்
நேயமாய்ப் பன்னீ ராயிர முருத்தான்
செய்திடுமிப்போ(து) செங்கையில் முத்திரைக்
கையனுழ்வாரைக் காணலா மென்ன.

End:

மனமகிழ்ந்து,
சேஷன்கவி தமிழ்புனையும் பொற்றாள்
அனுதினமும்-அன்பாய்-அடியவர்க்கரு
ளுந்தயாள, உனது
அடிமையென்றிந்த சென்மமு மீடேற
உண்மைசொன்னே னுனதனடிக்கே யாளாக்கும்,
இசைநோக்கும்—தமிழ்வாக்கும்—துயர்நீக்கும் சடகோப,
திவ்விய குணரத்தின தீபப் பிரதாபா!

வசனம். விருத்தம்.

ஞானதேசிகனுமந்த நாதமாமுனிக் குகந்து
தானவர்பிரபந்த முற்றுந் தா னுரைத்திட்டெந்நாளும்
மாநிலத்தவர்க்குநீரும் மறைத்தமிழ்ப் பிரபந்தந்தேவ
கானமாயுரையுமென்று களிப்புடன் முனிக்குச்சொன்னார்.

*   *   *   *

நாதமாமுனிக்குச்சேவை நல்கியே நம்மாழ்வாரும்
பூதலம்புகழ்ந்து போற்றப்பொற்றாணின் மண்டபத்தின்
மாதவத்திருப்புளிக்கீழ் மஞ்சன மாடி யாதி
நாதனைப்போற்றிசெய்தே நாளுந்தென்குருகை வாழ்ந்தார்.

*   *   *   *

மங்களம்.

மதுரகவி யெதிராசர் மணவாளமாமுனிக்கு
    நதிதாமிரபரணி யாதிநாதனுக்கு
பதிமாமறைத் தமிழ்ப்பிரபந்தம் பாடும்
    நாதமாமுனிக்கு
கதியருளுந் தென்குருகைக்காரி மாறற்குச்
    செயமங்களம், நித்தியசுபமங்களம்.

காரேநிகர் கருணைவள்ளல்காரி ராசேந்திரனுக்குப்
பாருலகிலுடைய நங்கை பாலனுக்கு
மாறன்திரு வண்பரிசாரந் திருவாழ்மார்பனுக்குச்
சீருலவும் புயன்வகுள தேசிகனுக்குச்
செயமங்களம்-நித்தியசுபமங்களம்.

விருத்தம்.

அருமறையின் தமிழ் நாலாயிரமும்வாழி
    யர(ங்க)நகர்க் கந்தாடையண்ணன்வாழி
திருவளரும் நாதமுனி யாதிநாதன்
    திருக்கோளூர்முனிவன் தென்குருகைவாழி
கருணைவளர் நூற்றெட்டுப் பதியும்வாழி
    காசினியிற் சேஷகவிப்பிரபந் தம்வாழி
தருவளருந் தாமிரபர்ணி நதியும்வாழி
    தலத்தாருஞ் சடகோபர் நாளும்வாழி.

தரணியில் நம்மாழ்வார் தஞ்சரித்திரந் தன்னையன்பாய்ப •
பரிவுடன் படிப்போர்கேட்போர் பரதமாய் நடிக்கின்றோரும்
நரகரி முகுந்தனாதி நாதநற் கிருபையினாலே
பரகதிக்கன்பராகப் பாருலகாள்வர் தாமே

Colophon:

ஸ்ரீ பராங்குச நாடகம் மு[த்து](ற்று)ம்.

The name of the scribe and the date of transcription are given thus:

[illegible]
[illegible]

[illegible] ஆவணிமீ [illegible] செவ்வாய்க்கிழமையும் அஷ்டமியும் [illegible] பெற்ற [illegible] நக்ஷத்திரத்துநாள் [யி](இ)ந்த ஸ்ரீ பராங்குச நாடகம் எழுதி முகிஞ்சுது முற்றும். ரெகுநாதாசாரியர் தாஸன் சுந்தரராஜன் எழுத்து. . . . . இந்த ஆழ்வார் நாடகம் ராமாயண சாத்தாதவரும் பார்த்து, சுவாமி ஸந்நிதியிலே அரங்கே[த்தி](ற்றி)னது.

(கு-பு.)--

இந்நூல், சடகோபரென்னும் நம்மாழ்வாருடைய திருவவதாரம் முதலிய வைபவங்களேயும், வரலாற்றையும், அவரருளிய பிரபந்தங்கள் நான்கின் பெருமைகளேயும் விளக்குவது. இசைப்பாட்டாலாகியது. ஸ்ரீரங்கத்துக் கந்தாடை அண்ணன் என்பவரது சிஷ்யராகிய சேஷ கவியிஞல் இயற்றப்பட்டது. நூலின் முதலிலுள்ள அகவற்பாவிஞல் நம்மாழ்வாரின் சரிதம் சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளது.

(b) ஆழ்வார் உற்சவப்பாட்டு.
ĀḺVĀR UṚSAVAPPĀṬṬU.

Foll. 21*a*. Fol. 21*b* is blank.

Incomplete.

Rhythmic songs in praise of the festival of Nammāḻvār celebrated for ten days in the month of Vaiśākha. The colophon given below apparently relates to the work described above.

Beginning:

எருதுக்குக் கொண்டாட்டம் திரணம்,—பெண்களிணே
முலேக்கணிவதும் முத்தாபரணம்
டரிதிக்கோராயிரங் கிரணம்-ஆழ்வார்-
பத்தாந்திருநாள் சத்தாபரணம்,
சேவிக்க வாருங்கோள் பெண்காள்.

End:

சடகோபர் தாளிணே போ[த்தி](ற்றி)
• சகலர்க்குஞ்-சந்தோஷமாகத் திருவிடாயாற்றி
சேவிக்க வாருங்கோள் பெண்காள்—எங்கள்
வாழ்விக்குருகை வகுளாபரணரைச்,
சேவிக்க வாருங்கோள் பெண்காள்.

ஆழ்வார் திருவடிகளே சரணம். ஸ்ரீஜெயமஸ்து.

Colophon:

இந்த ஆழ்வார் நாடகம் படித்த பேருக்கு ஐச்வரியம் உண்டாம். புத்ர ஸம்பத்துண்டாம். நல்ல ஸ்திரீ உண்டாம். ஜ்ஞாநவைராக்யங்களுண்டாம். . . . . ஸ்வாமி ஆழ்வார் ப்ரத்யக்ஷமாக எழுந்தருளியிருப்பர். ஆக இவ்வளவு காரியம் உண்டானபடியிஞலே இந்த ஆழ்வார் நாடகத்தை(ப்) பண்ணோடே யிசையோடே படிக்கவும். பண்ணோடே யிசையோடே படிக்கத் தெரியாதே போனல் தெண்டாகாரமாயாகிலும் படிக்கவும்.

(கு-பு.) —

இது, ஆழ்வாரின் வைசாகோற்சவம் பத்து நாட்களிலும் உபயோகிக்கப்படும் வாகனங்களேப்பற்றிய இசைப்பாட்டு. பத்தாம் திருவிழாவுக்கும், விடாயாற்றி யுற்சவத்துக்குமே இந்தப் பிரதியிலுள்ளன. 20 என்னும் எண்ணமைந்த ஏடு இல்லாமையால் 1–9 திருவிழாப் பாடல்கள் இதிலில்லே.

R. No. 424.

Palm-leaf. 10¾ × 1⅛ inches. Foll. 24. Lines, 4 in a page. Tamil. Slightly injured.

Presented in 1919–20 by Alarmēlmaṅgammaṅgār, wife of Gōvindam Ayyaṅgār, Mēlaittirumāḷigai of Tiruvāymoḻippiḷḷai, Ālwartirunagari.

(a) நம்மாழ்வார்திருக்கோலக்கவி.

NAMMĀḺVĀRTIRUKKŌLAKKAVI.

Foll. 1a—12b. Fol. 1b is blank.

Complete.

A poem extolling Nammāḻvār of Tirukkuruhūr by way of describing the greatness of the daily festival celebrated for ten days in the month of Vaiśākha of each year.

Beginning:

ஹரி : ஓம் திருக்கோலக்கவிதைக்குக் கடவுள் வாழ்த்து.

நாராயணன்ருள் மிசைவேத நான்குந் தமிழாயுரைசெய்து
பாரா(ர்) துயர்தீர்த் தருள்மாறன் பரனத்தியனத் திருநாளில்
நேராயணிந்த திருக்கோல திகழ்த்துங்கவிகள் த[ன்](மை)ப்பாடக்
காரார் கருணை மதுரகவி கமலம்புரையுங் கழல்துதிப்பாம்.

திருக்கோலங் கொண்டருளுகிற திருநாட்கவி.

அஞ்சனென்ன வடியவரையாள வேண்டி
யரசர்கள் சிரோமணியாங்காரி ராசன்
தஞ்சிறுவனென வுலகில் வந்துதோன்றித்
தமிழ்மறை யோராயிரமு மருளியாங்கு
மஞ்சரியுலாவு பொழிற் குருகையூரில்
மால்கொளுமார் சார்ங்கமொடு மருவுமாறன்
செஞ்சரணந் தொழுமடியார் தம்மைநாளுந்
தெரிசிப்பார் தானெனது சிரம்வைத்தேனே. (க)

பல்லக்கில் திருக்கோலம்.

மல்லிகையு முல்லையொடு மருவுவாச
மதுநிறைந்த வகுளமு மென்குழலிற்சூட்டி
யல்லின் வருமுழும்திய முகத்துமாத
ரரும்பரத நடனமிடவிசைகள் பாடச்
சொல்லியம்பு மறைத்தமிழ் தொடியர்தாமுஞ்
சூழ்ந்திறைஞ்ச ராசரங்கந் தோன்றவேலை
வெல்லவுந் தன்வடிவுகொடு சிவிகைமீது
மேவுமகிழ் மாறனடி விரும்பினேனே. (உ)

End:

பத்தாந்திருநாள் பல்லக்கில்.

உம்பர்தொழுமா மாயனரவின் மீதே
யொண்ணுதலார் மலர்மடந்தை யிருதாள்பற்ற
நம்புமடியா ரிடர்கள் களைய வேண்டி
ஞானநித்திரை பொருவு ம(ை)டவுபோல
அம்புவியி லார்ந்தவளக் குருகையூரி
லணிரத்தினப் பொற்கட்டின் மணிகள்சேர்த்துப்
பம்புமொளி சிறந்தவனச் சிவிகைமீது
பராங்கு(ச)ளுர் வருமழகைப் பரவினேனே. (உ0)

பலச்சுருதி.

செங்கமலத்திரு மார்பனருள் சேர்மாறன்
திருக்கோலங் கொண்டருளுந் திருநாள்தன்னில்
அங்கவன்ற னுதிமுதற் பத்துநாளி
லணிந்த வெழிற் கோலமதிலாசையாகி
மங்களஞ்சேர் கவிதையெனவரு நாலைந்து
மணவாள மாமுனி வனருளாற் சொன்னேன்
இங்கி[வையை](வற்றை)ப் படிப்பவர்கள் குருகூர்மாற
னிணையடிக் கீழிடைபிரியாதிருப்பர் தாமே.

திருகோலக் கவிதைப் பாட்டு இருபது. பலச் சுருதிபாட்டொன்று. ஆக இந்த இருபத்தொரு பாட்டு(ம்) இந்த ஸம்புடத்தில் இருக்[கு](கிற)தென்று அறியத்தக்கது.

(கு-பு.)—

இது, திருக்குருகூரில், நம்மாழ்வாருடைய திருவிழா பத்துநாட்களின் சிறப்பைப்பற்றிய நூல். காப்பு, பல சுருதிப் பாடல்களுடன் 22 பாடல்களாகியது. இந்தப் பிரதியில் முற்றுமிருக்கிறது.

(b) குளந்தைபெருமாளுபசாரக்கவி.
KULANDAIPERUMĀLUPACĀRAKKAVI.

Foll. 13a—15b.

Songs composed by way of respectfully offering of worship to god Viṣṇu in Kuḷandai or Perungulam, a place near Alwartirunagari.

Beginning:

ஆசிரியம், உபசார கவி.

நாரணு நால்வேதகாரணு செந்தமிழ்
நாலாயிரக் கவிதையால்
நாவீறர்முதலான வாழ்வார்கள் பதி(ன்)மரும்
நாடோறு மேத்திக்க
வாராலு மறியாத வோராயிரம் பதத்
[தய்](தை)யனே மலர்(க்)கை[ய்]யனே
யாதாரமாகு தின்பாதா ரவிந்த மல
ர[டு](டி)மைக்கு நிலைமையாமே.

காரார்கு[ள](ழ)ற் கமலைவாரார் தனத்தழகு
கண்டுமயல் கொண்டமுகிலே
காமித்தகைகேசி நேமித்த கானகக்
கண்வருகானை வென்றும்
பேராயிரம் முடைசிரீராம நேமிகை
பிடித்துவி லொடித்துநின்று
பே(ய்)ச்சிமுலையுண்ட நன்மாலாதி மறையவர்
பெருந்திரு கண்ணுடிநோக்கே. (௬)

End:

வெண்பா.

சென்னெல்புடை சூழ்குளந்தைத் தேவனை னு மாயவனே
கன்னல்மொழி மாதர்தட்டிலகையெடுத்தார்—சன்னிதியில்
அண்டர்தொழ வந்துநின்று ரந் திருவந் திக் காப்புக்
கொண்டருள வேண்டு மருள் கூர்ந்து.

காயாம்பூ வண்ண கஞ்சமலர்ச் செங்கண்ண
மாயா குளந்தை வருமாலே—நேயமொடு
மாவனஞ்சூ ழுங்கமல மான்வதுவை செய்வாலி
காவனவா கண்டருளிக் கா.

(கு-பு.)—

இது ஆழ்வார் திருநகரிக்கு அடுத்த குளந்தை (பெருங்குளம்) யென்னும் தலத்தில் கோயில் கொண்டருளிய திருமாலுக்கு உபசாரமாக வியற்றப்பட்ட பாடல்களையுடையது.

இந்தப் பிரதியில் முற்றுமிருக்கிறது. 16 எண்ணமைந்த ஏட்டில் "இவ் வளவு கண்ணினன்" என்று தொடங்குஞ் செய்யுளும், பின்புறத்தில் வட மொழி சுலோகமொன்றும் எழுதப்பட்டுள்ளன.

(c) இராமாயணச்சிந்து.
IRĀMĀYAṆACCINDU.

Foll. 17*a*—27*b*.

Complete.

A kind of rhythmic composition briefly narrating in sixteen stanzas the story of the Rāmāyaṇa. From the last stanza it is made out that the author was Tirukkuruhūr Vaikuṇḍar.

Beginning:

சதுரங்க சேனையுடன் தசரதனும் வரவே
சானகியை மாலையிட்டுத் தளத்துடனே திரும்ப
அதிகோபத்துட னெதிர்த்த முனிபரசு ராமன்
அடல்குலைத் துவில்பறித் தன்புடனே சென்ற
மதிமுகத்தான் ரெகுராமன் மலரடியைப் பரவும்
மாருதிதன்னடி யிணையை மறவாதே மனமே.

End:

துலங் கவி[பூ](பீ)ஷணர்க்கு முடிசூ(ட்)டும் ரகுவீரன்
நலமு[கிள்](கூர்)த்தந்தனில் வசிட்டர் வேதியர் முடிசூட்ட(த்)
தாமதமில்லாமல் விண்ணோர் மலர்வாரி[ச்] சொரிய(த்)
தம்பிமார்மூவர் குடை சாமரங்கள் போடச்
சாமியாராக் கென்றுசொல்லிக் கட்டியங்கள் கூற(ச்)
சதுர்வேத முழங்கச் சிம்மாசனக் கொலுவிருந்து
பூமிதனை யாளும் ரகுராமரடி பரவும்
புயம்பெரிய மாருதிதன் பொற்பாதந் துணையே
பெருகவி குலத்தரசை ய[ளை](ழை)த்துவரங் கொடுத்து(ப்)
பிரபலமாய்த் தேசமதை யாண்டிருவென் றனுப்பி(த்)
திருவரங்கர்த[னை]க் கொடுத்து வி[பூ](பீ)ஷணரை யனுப்பி(த்)
தேசமதி லாற்லொரு கடமை[ய](க)ளும் வாங்கி(க்)
குருகூர் வைகுண்டன் தமிழ்க்கருள்புரிந் தெ[ன்று](ந்நா)ளும்
குவலயத்தை யாளும் ரகுராமருமே வாழி
யருகிருக்குந் தம்பியருஞ் சீதையரும் வாழி
யடியிணையைப் பரவனுமனுதினமும் வாழி. (௰௬)

Colophon:

ஹரிஸ்ரீ?. பேரில் சிந்துமுற்றும்.
ஆழ்வார் திருவடிகளே சரணம்.
ராமாயணம் சிந்துப்பாட்டு ௰௬ க்கு ஏடு ௰௪.

(கு-பு.)—

இது, இராமாயணக் கதையைச் சுருக்கமாக விளக்குவது. ஒருவகை யிசைப்பாட்டிற் சேர்ந்தது. திருக்குருகூர் வைகுண்டன் என்பவராலியற்றப் பட்டுள்ளதென இறுதிப்பாட்டால் தெரிகின்றது. இந்தப் பிரதியில் முற்று மிருக்கிறது.

R. No. 425.

Palm-leaf. 9½ × 1½ inches. Foll. 138. Lines, 10 in a page. Tamil and Grantha. Slightly injured.

Presented in 1919-20 by Alarmēlmaṅgammaṅgār, wife of Govindāccariar, Mēlaittirumāḻikai of Tiruvāymoḻippiḻḻai, Alwartirunagari.

(a) ஸ்ரீஶைலநாததிவ்யசரிதம்.

ŚRĪŚAILANĀTHADIVYACARITAM.

Foll. 1*a*—11*b*.

See the Sanskrit part of this Triennial Catalogue.

(b) பரவஸ்துநிர்ணயம்.

PARAVASTUNIRṆAYAM.

Foll. 12*a*—20*a*. Fol. 20*b* is blank.

States in Maṇipravāla style of composition that Bhaṭṭarpirān or Periyāḻvār established in the court of Vallabhadēva, king of the Pāṇḍia country that god Viṣṇu is the Supreme Brahman and obtained the promised wealth for his high proficiency in the Vēdas and Śāstras.

Complete.

Beginning :

ஸ்ரீய:பதியாய் அவாப்தஸமஸ்தகாமனாய், கல்யாணகுணாத்மகனான ஸர்வேச்வரன் மகாப்ரளயாவஸானத்தில் "பஹு ஸ்யாம்" என்று ஸங்கல்பித்து, அந்த ஸங்கல்பத்தாலே ப்ருதிவ்யப்தேஜோவா[யுரா](ய் வா)காசாத்மகமான பூதபஞ்சகங்களை ஸ்ருஷ்டித்து, ... [illegible][க]மாக "நான்முகனை நாராயணன் படைத்தா"னென்கிறபடியே ஸ்வ நாபீகமலத்திலே சதுர்முகனை ஸ்ருஷ்டித்து . . . . [illegible]மான [illegible]ங்களையும் ஸ்ருஷ்டித்து, தத்பரிபாலநார்த்தம் சந்த்ர ஸூர்யாதிகளை ராஜாவாக்கி, அவர்களைக்கொண்டு ஸகல ஜகந்நியமனம் பண்ணியருளினான். இப்படி ஜகந்நியாமகனான சந்திரவம்சத்தில் . . . . [illegible] என்று புராணப் பிரஸித்தையாய்ப் புவநதலாலங்காரபூதையான [illegible]யிஷ்டகனாய், க்ஷத்ரியாக்ரேசனான ஸ்ரீவல்லபதேவ மகாராஜாவானவன், ஒரு நாள் தன் நகரசோதனார்த்தமாக . . . . வீதியிலே வரும் பொழுது . . . . தேசவாஸி பிராமணன்,

வர்ஷார்த்தமஷ்டௌ ப்ரயதேத மாஸாந்
நிசார்த்தமர்த்தம் திவஸம் யதேத |
வார்த்தக்யஹேதோர்வயஸா நவேந
பரத்ர ஹேதோரிஹ ஜந்மநா ச ||

என்று பஞ்சமவேதப் பிரஸித்தமான ச்லோகத்தைப்பண்ண, அதைக் கேட்டு ராஜாவும்

End :

ஸ்ரீமந்நாராயணன், ஸ்வவைசுவரூப்ய தர்சனார்த்தமாகக் க்ருஷ்ணன், அர்ச்சுனனுக்கு "திவ்யம் ததாமி தே சக்ஷு:" என்று திவ்யசக்ஷுஸ்ஸைக்[கு](கொ)டுத்தா[ப்](ற்)போலே தானும் ராஜாவோடு, செல்வநம்பியோடு, பிரஜைகளோடு வாசியற எல்லாருக்கும் திவ்யசக்ஷுஸ்ஸைக்[கு] (கொ)டுத்து எல்லாருக்கும் ஸேவை ஸாதித்தருளினான். உடனே ராஜாவும், "மல்லாண்ட திண்டோள் மணிவண்ணா" என்று பெரியாழ்வார் மங்களாசாஸனம் பண்ணினபடியே "[illegible]" என்று [illegible] அந்த ச்ரியப்பதியை ஸேவித்து, இவனே பரவஸ்துவென்று

நிச்சயித்து, “ ஸ்ரீபதேர் விஜயதேர் காரணம் தேவதேவ பரதேவ விஷ்ணு ஷ: | நாராயணாத் ப்ரதிபாத்ய மோக்ஷ பாதயுக்த ஸமஸ்தஜாதிகே || ” என்று சரணகதிபண்ணி, தத்க்ருபா பலமான ஸர்வஶ்ரேயஸ்ஸையுமடைந்து க்ருதார்த்தனானன். இப்படி ஸ்ரீவல்லபதேவ மகாராஜாவைவஶீகரித்து(ப்) பெரியாழ்வாரையிட்டு, ஸர்வலோக ப்ரஸித்தமாய், ஸர்வசேதநோஜ்ஜீவந ஹேது பூதமான வஸ்து நிர்ணயம் பண்ணியருளி ஜகத்தை வாழ்வித்தருளி (ன)ன். ஸ்ரீ ஸஹஸ்ரநாமாஜனும் ஸடரிகரணுய்க்கொண்டு அஷ்டாக்ஷரம் விஷ்ணு ஸஹஸ்ரம் என்கிற தம்முடைய கோவிலேற எழுந்தருளினர்.

(கு-பு.)—

இந்நூல், ஸ்ரீவில்லிபுத்தூரில் அவதரித்த பட்டர்பிரான் என்னும் பெரியாழ்வார், வல்லபதேவனென்னும் பாண்டியவரசன்சபையில் ஸ்ரீமகாவிஷ்ணுவே பரமான் தத்துவப் பொருள் என்று கூறி ஜயித்து அவன் வித்யாசுல்கமாகக் கட்டியுள்ள பணக்கிழியையறுத்தா ரென்னும் பழைய வரலாற்றை விவரமாகத் தெரிவிப்பது. மணிப்ரவாள நடையிலாயது. நூலாசிரியர் இன்னாரெனத் தெரியவில்லை. இந்தப் பிரதியில் இது முற்றுமிருக்கிறது.

(c) கைசிகபுராணம்.

KAIŚIKAPURĀṆAM.

Foll. 21*a*—42*b*.

Same work as that described under No. 420 of the D.C. T. MSS. Vol. I.

Complete.

(கு-பு.)—

இது டிஸ்கிரிப்டிவ் காடலாகின் 420-வது நம்பர் பிரதி போன்றது. ஆயினும் இதன் முதலில் பூர்வ பீடிகையாக 4 பக்கங்களில் சில விஷயங்கள் எழுதப்பட்டுள்ளன. இந்தப் பிரதியில் இது முன்றுமிருக்கிறது.

(d) கஜேந்த்ரமோக்ஷம்.

GAJĒNDRAMŌKṢAM.

Foll. 43*a*—56*b*.

Complete.

For the subject-matter of this work see No. 1106 of the D. C. T. MSS. This MS. contains the stanzas in the Adhyāyas 2 to 4 of the eighth Skandha of the Bhāghavata with meaning in Tamil stnaza by stanza and with an introduction.

Beginning:

ஶ்ரிய:பதியாய் அவாப்த ஸமஸ்த காமனாய் ஸமஸ்த கல்யாணகுணாத்மகனான ஸர்வேசுவரன்

தேவ: கருணோ கர்மவோகே ஸ்ரியாஸாயஜ்ஜமதுக்: |
ஸுதேஷுவிஷ்ணுர் விஷ்ணு ராஜ்ஞோ ஹ்ருதே ஹம் ஸ மவதே ஸ்ஸஹ ||

என்றும், சுடரொளியாய் நின்ற தன்னுடைச் சோதியென்றும்,

ஸத்யகாமநமஹீவ்யம் தஸ்தாநம் விஷ்ணோர்மஹாத்மந: |

என்றும் சொல்லுகிறபடியே நிரவயிகதேஜோரூபமான ஸ்ரீவைகுண்டத்திலே . . . .

* * * *

நம்மை ஆச்ரயிக்க வருவாரோவென்று யோகநித்ரா வ்யாஜத்தாலே அவஸரப்ரதீக்ஷனாய்க் கொண்டெழுந் தருளியிருக்குமளவில், பாகவதோத்தமமான கஜேந்த்ராழ்வான், ஒரு நீர்ப்பூவான முதலையின் கையிலேயகப்பட்டு நோவுபட அத்தைத் திருவுள்ளம்ப[த்தி](ற்றி), அம்முதலை கிடந்த மடுவின் கரையிலே வந்து, அவ்வவஸ்த(யைப்) போக்கிப் போர்த்த பிறப்பொடு நோயொடு மூப்பொடிறப்பவை பேர்த்துப் பெருந்துன்பம் வேரற நீக்கித் தன்தாளிணைகீழ்ச்சேர்த்து" என்கிறபடியே தன் திருவடிகளிலே நித்திய கைங்கர்யத்தைக்கொடுத்து ரக்ஷித்த மஹாப்ரபாவத்தை அருளிச்செய்கிறார். எங்[க][ங]னேயென்னில் :—

> ஆஸீத்கிரிவரோ ராஜம்ஸ்த்ரிகூட இதி விஶ்ருத: |
> க்ஷீரோதேநாவ்ருத: ஶ்ரீமாந் யோஜநாயுதமுச்ச்ரித: ||
> தாவதா விஸ்த்ருத: பர்யக் த்ரிபி: ஶ்ருங்கை: பயோநிதிம் |
> திஶ: கம் ரோசயந்நாஸ்தே ரௌப்யாயஸஹிரண்மயை: ||

என்கிறபடியே, க்ஷீரஸாகரமத்யத்திலே பர்வதங்களுக்குள்ளே ச்ரேஷ்டமாய் த்ரிகூடமென்று பிரஸித்தமான பேரையுடைத்தாய் . . . .

* * *

அநேக நதீதடாகங்களாலலங்க்ருதமான பர்வதத்திலே

End:

> ஏவம் விமோக்ஷ்ய கஜயூதபமப்ஜநாப:
> தேநாபி பார்ஷத(க)திம் கமிதேந யுக்த: |
> கந்தர்வஸித்தவிபுதைருபகீயமாந:
> கர்மாத்புதம் ஸ்வபவநம் கருடாஸநோ(அ)காத் ||

ஸ்ரீமந்நாராயணனு மிப்படிக் கஜேந்த்ராழ்வானுக்கு ஸாரூப்யத்தைக் கொடுத்து, என்னையும் உன்னையு மிந்த ஸரஸ் முதலான [து](ஸ்த)க்களையும் யாவர் சிலர் பிராதக்காலத்திலே நினைக்கிறார்களோ, அவர்களுடைய ஸர்வபாபங்களும் போம். இந்த ஸ்தோத்ரத்தைக்கொண்டு யாவர் சிலர் என்னைத் துதிக்கிறார்களோ, அவர்களுக்கு ஸர்வோத்க்ருஷ்டமான ஜ்ஞானத்தைக் கொடுக்கிறேனென்று அனுக்கிரகித்துக் கஜேந்த்ராழ்வானோடும் பாஞ்சஜன்யகோஷத்தோடுங்கூடப் பெரிய திருவடி திருத்தோளிலே யேறியருளி, விதிசிவஸனகாதிகளாலே ஸ்துதியமானராய்க்கொண்டு தம்முடைய கோவிலேற எழுந்தருளினார்.

Colophon:

இதி ஶ்ரீபாகவதே அஷ்டமஸ்கந்தே கஜேந்த்ரமோக்ஷணோ நாம சதுர்தோ(அ)த்யாய:.

[illegible] |
[illegible] ||
[illegible]
[illegible].

திருவாய்மொழிப்பிள்ளை மேலைத்திருமாளிகைப் பெரிய திருவடி ஸ்வஹஸ்தலிகிதம்.

(கு-பு.)—

இது டிஸ்கிரிப்டிவ் காட்லாக்கின் 1106 நம்பரில் வந்துள்ளதே, இதில் வடமொழி பாகவத சுலோகமும் அதற்குப் பொழிப்புரையுமாகவுளது. அங்கு இக்கதை தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இதற்கு முதலில் அவதாரிகை விசேஷமாக எழுதப்பட்டுள்ளது. இந்தப் பிரதியில இது முற்றும் இருக்கிறது. பொழிப்புரையியற்றியவர் இன்னாரெனத் தெரியவில்லை.

(e) மோஹனக்ஷேத்ரமாகாத்ம்யம்.

MŌHANAKṢĒTRAMÂHATMYAM.

Foll. 57a—63b.

On the greatness and religious importance of Mōhanakṣētra or Tirumōhūr, a place dedicated to the worship of god Viṣṇu under the name Kālamēghasvāmi and situated 6 miles from Madura.

Complete.

Beginning:

ஸ்ரீய:பதியாய் அவாப்த ஸமஸ்த காமனாய் ஸமஸ்த கல்யாண குணாத்மகனாய் . . . .
நித்ய ஸூரிகளுக்குக் காட்சிகொடுத்துக்கொண்டெழுந்தருளியிருக்கிற ஸ்ரீவைகுண்டநாதன், அந்த நித்யஸூரிகளோபாதி லீலா விபூதியிலுள்ளாரும் தம்மை ஆச்ரயித்து உஜ்ஜீவிக்கைக்கு விரகேதோவென்று பார்த்து,

* * * *

பகவான் அமிர்தப்ரதான ஸமயத்திலே யாதொரு இடத்திலே ஜகந்மோகன வடிவைப் பிரகாசித்தருளின[ன்](னோ) அந்தத்தேசமானது, மோகன க்ஷேத்திரம் திருமோகூரென்று பேரையுடைத்தாயிருக்கும்.

[illegible] |
[illegible] ||

என்று, பிரமாதிகளான ஸகல தேவர்களும

End:

புஷ்பஹாஸ ஸுகுமாரமான இத்திருமேனியோடே [illegible] [illegible]யைக்கொண்டு நகரி வலம்வருகையில் அஸூயாபரரான பாஷண்டிகளுடைய திருஷ்டி தோஷ பரிஹாரார்த்தமாக சாஸ்த்ரவிஹிதமான புஷ்பயாக பூர்வகமாகக் காப்பிட்டு,

“ வகையால் மனமொன்[னி](றி) மாதவனை நாளும்
புகையால் விளக்கால்[ப்] புதுமலரால் நீரால்
திசைதோறமரர்கள் சென்றிறைஞ்சநின்ற ”

என்னும்படி ஸர்வோபசார ஸஹிதமான திருவாராதனங்கொண்டருளி அமுது செய்தருளி, ஸேவார்த்திகளாய் வந்த ப்ரஹ்மாதி ஸகலதே வதைகளுக்கும் ஸேவை ஸாதித்து விடைகொடுத்தருளித்து.

ஸ்ரீஶோஹநவல்லீஸமேத ஸ்ரீகாளமேகஸ்வாமிநே நம꞉.

ஸ்ரீமத்ஸ்ரீமதுராநாயகீஸமேத ஸ்ரீமோகூர்ஸ்வாமிநே நம꞉.

(கு-பு.)—

இது, மதுரை ஜில்லாவிலுள்ள திருமோகூர் என்னும் திவ்யஸ்தலத்தில் நித்யவாஸஞ் செய்கின்ற ஸ்ரீகாளமேகஸ்வாமியென்னும் திருமால் விஷயமானது. அத்தலத்தின் மகிமையும், அதில் திருமால் வந்திருப்பதற்கு உரிய காரணமும் இதில் விரிவாகவுள்ளன. இது மணிப்ரவாள நடையிலாகியது இந்தப் பிரதியில் முற்றுமிருக்கிறது.

(f) ஸ்ரீஜயந்தீமாகாத்ம்யம்.

ŚRĪJAYANTĪMAHĀTMYAM.

Foll. 64*a*—81*b*.

Determines what day in each year should be fixed as the birthday of Lord Kṛṣṇa and deals with the sacredness and importance of religiously observing that day as a holy day.

The stanzas contained in the twenty-seventh Adhyāya of the Skāndapurāṇa with meaning in Tamil of each stanza is given here.

Beginning:

> நம꞉ கவிமுகாம்போஜ ஸாரஸ்வதநிதேத்யபி |
> விக்நத்வாந்தஸ்வரூபாய நீலாஞ்ஜநநிபாய தே ||
> ஸ்ரீநாரத உவாச.

ஸ்காந்த புராணத்திலே நாரத ப்ரமருஷி பிரமாவினிடத்தில் நின்றும் சில வ்ரதங்களினுடைய மாகாத்ம்யங்களையும் அநுஷ்டானப்ரகாரங்களையும் கேட்டு, அநந்தரம், ஜயந்தியினுடைய மா(கா)த்ம்யத்தையும், அநுஷ்டான ப்ரகாரங்களையும் கே[ழ்க்](ட்)க் கடவனுய்க்கொண்டு பிரமாவைப் பார்த்து ஒரு வார்த்தை சொன்னுன்.

> ஜயந்த்யா꞉ ப்ரபவோ ஹ்யாத்ம்ஸ꞉ கத்யதாம் விதிநா ஸஹ |
> யஸ்ய ஶ்ரவணமாத்ரேண ப்ராப்நோதி பரமம் பதம் ||

வாரீர் பிரமாவே! யாதொன்றைக் கேட்டுத் தான் பரமபதத்தை அடைவே[ன்](னே)! அந்த ஜயந்தீ மாகாத்ம்யத்தை எனக்குச் சொல்லுவீராக.

ப்ரஹ்மோவாச:—

> ஶ்ருணு வத்ஸ ப்ரவக்ஷ்யாமி ப்ரஹ்மவத்யா ஹிதேப்ஸயா |
> ஜயந்த்யா꞉ ஸம்ப்ரதாயம் ச பாவநம் பாபநாஶநம் ||

வாராய் பிள்ளாய்! ஜயந்தியினுடைய மாகாத்ம்யத்தையும் சொல்லக் கேள். இது புண்ய ஜயத்தையும், பாபக்ஷயத்தையும் பண்ணும். . . . . .

* * * *

க்ருஷ்ணஜந்மாஷ்டமீயோகே ப்ரஸித்தா பாபநாஶிநீ |
ஸர்வதா நாஶநோ புண்யா துஷ்டீ புஷ்டிகரீ ததா ||

* * * *

பூர்வகாலே யதா ராஜந் ஶ்ரவணாந்விதா |
ததாஷ்டமீ பூர்வவிஶேஷம் ஸர்வகாம ஸ்வஹம் ததீ(ம்) ||

திருவோணத்தோடே கூடின எகாதசி அதிகமான பலத்தைக்[கு](கொ)டுக்குமா[ப்]போலே ரோகிணியோடேகூடின அஷ்டமியும் அதிகமான பலத்தைக்கொடுக்கும்.

அர்த்தராத்ராதூர்த்வம் கலாமாத்ராப்யஷ்டமீ |
தத்ரோதயே விஷ்ணும் க்ருஷ்ணம் ப்ரபூஜயேத் ||

அர்த்தராத்திரிக்[கி](கு)மேல் ஒரு கலையாகிலும் அஷ்டமி கூடினால் அதில் சந்திரோதயத்தில் ப்ராதுர்பூதனான கிருஷ்ணனைத் திருவாராதனம் பண்ணக்கடவன்.

End:

தித்யந்தே பாரணா கார்யா ஜயந்த்யாம் ஹரிதத்பரை: |
வைஷ்ணவைர்வைஶ்வவிஶேஷேண ஸர்வைஸ்ஸம்யக் ஸதைவ ஹி ||
ஸமாஶ்ரிதஸம்ப்ரதாயிபி: ப்ராதரேவ து பாரணா |
ப்ரபந்நாநாம் மஹாத்மநாம் ஸர்வேஷாம் நியதாத்மநாம் ||
விஶிஷ்(ட)ஸாத்வதஸித்தை: ப்ராதரேவ து பாரணா |
உத்ஸவாந்தே திதேரந்தே வ்ரதீ குர்யாத்து பாரணாம் ||
ஸமாஶ்ரிதஸம்ப்ரதாயிபி: ப்ராதரேவ து பாரணாம் ||

உக்ராதிஸாத்வதாநந்தஸம்ஹிதாதி ஸமஸ்த வசநங்களாலே பிரயோஜநாந்தர பரரான ஸம்ஸாரிகளுக்குத் தித்யந்தமான பிராதக்காலத்திலே பாரணையென்றும், ஸமாஶ்ரிதஸம்ப்ரதாயிகளான முமுக்ஷுக்களுக்கு, உத்ஸவாந்தமான திருவவதாரானந்தர ராத்ரியிலே பாரணையென்று(ம்) விதிக்கப்பட்டது.

ஶ்ரீஜ்ஞாநக்ஷேத்ரம் ஜயந்தீ தோஷணம் ஶுபே |
மம ஸங்கேதவாக்யாநி[தி](ஷி)நா த்ரகாயாவிசாரணா ||

முனியே, நீயும் என்னுடைய ஆஜ்ஞையினாலே இந்த ஜயந்தியை அனுஷ்டி. அந்[த்ய](த)த்திலே நிச்சயமாக மோக்ஷத்தையடைவை.

Colophon:

இதி ஶ்ரீபாஞ்சராத்ரே ஜயந்தீ மாஹாத்ம்யம் நாம ஷட்விம்ஶோ த்யாய: |

நம: பாரமைகஶ்யாம நமஸ்தே விஶ்வமங்கல |
வாஸுதேவாய ஶாந்தாய யதூநாம் குலகேதவே நம: ||
ஸர்வதேவ . . . . ஸுகிபவந்து ||

. . . . திருவாய்மொழிப்பிள்ளை மேலைத் திருமாளிகைஸ்வாமி பொன்னய்யங்கார் குமாரன் பெரிய திருவடிப்பிள்ளை ஸ்வஹஸ்த லிகிதம். ஸ்ரீ ஜயந்தி மாகாத்மியம் ஸம்பூர்ணம்.

ஶுபமஸ்து.

(கு-பு.)—

இது, ஸ்ரீகிருஷ்ணபகவானுடைய அவதாரதினத்தின் மகிமையைக் கூறுவது. வடமொழி ஸ்காந்தபுராணத்திலுள்ள ச்லோகங்களும் அவற்றிற்குப் பொழிப்புரையுமாக அமைந்துள்ளது. இந்தப் பிரதியில் முற்றுமிருக்கிறது.

(g) வேதவிண்ணப்பம்.

VĒDAVINNAPPAM.

Foll. 82a—83a. Fol. 83b is blank.

See the Sanskrit part of this Triennial Catalogue.

(h) ராமாயணபாராயணகாலேபடநீயஶ்லோகா:.

RĀMĀYAṆAPĀRĀYAṆAKĀLĒPAṬHANĪYAŚLŌKĀḤ.

Foll. 84a—85a.

See the Sanskrit part of this Triennial Catalogue.

(i) ராமாவதாரமகிமை.

RĀMĀVATĀRAMAHIMAI.

Foll. 85b—89b.

Incomplete.

Deals with the greatness and importance of the incarnation of god Viṣṇu as Rāma and of the Rāmayaṇa which relates the story of Rāma.

Beginning:

ஸ்ரிய:பதியாய் அவாப்த ஸமஸ்தகாமனாய் ஸமஸ்த கல்யாணகுணாத்மகனான ஸர்வேச்வரன், வைகுண்டே து பரே லோகே ஸ்ரீஸஹாயோ ஜநார்த்தந: | உபாப்யாம் பூமிநீளாப்யாம் ஸேவித: பரமேஶ்வர: என்றும் வைகுண்ட . . . . ஸாமவேதஸ்வரூப என்றும், சுடரொளியாய் நின்ற தன்னுடைச் சோதி யென்றும், தெளிவிசும் பென்[னு](று)ம்.

End:

யத்ததேஜஸ்ஸ்வீகுர்வாண: ஶ்ரீமாதுரவணீசக்ஷு: ஶ்ரோத்ரதத்தபாணிபாத: உதக்ராதி ஶ்ருதிவ்யதிபாதநன ஸர்வேச்வரன், தசரத

குமாரராய் ராமாத்மநா அவதரிக்கையாலே, வேதந்தானும் ஸ்ரீவால்மீகி பகவான் பக்கல் நின்றும் ஸ்ரீராமாயண ரூபேண அவதீர்ண மாகையாலே வ்யாவ்ருத்தமாயிருக்கும். இ(ந்)த ஸ்ரீ ராமாயண ப்ரதிபாத்யனான ஸர்வேச்வரன் விதாம வொாவயாரோவ கூ்.ா உமாரமஷாவஷ என்கிறபடியே.

(கு-பு.)—

இது, திருமால், தசரத சக்கரவர்த்தியின் குமாரராக வவதரித்த பிரபாவத்தையும், ராமாயணத்தின் பெருமையும் தெரிவிப்பது. மணிப்ரவாள நடையலாவது. இந்தப்பிரதியில் முற்றுப்பெறவில்லே. இயற்றியவர் இன்னாரெனத் தெரியவில்லே.

(j) ராமாயணபட்டாபிஷேகம், தமிழுரையுடன்.

RĀMĀYAṆAPAṬṬĀBHIṢĒKAM WITH TAMIL COMMENTARY.

Fol. 90a—116b.

Contains the stanzas relating to the coronation ceremony of Rāma; as found in last Sarga of the Yuddhakāṇḍa in Vālmiki's Rāmāyaṇa with meaning in Tamil of each stanza.

Beginning:

ஸ்ரிய:பதியாய் அவாப்த ஸமஸ்தகாமனாய் ஸமஸ்த கல்யாணகுணாத்மகனான ஸர்வேச்வரன் ராவணஸம்ஹாரார்த்தமாக வெங்கதிரோன் குலமென்று ஜகத்பிரஸித்தமான சூர்யவம்சத்திலே எல்லையில் சீர்த்தயரதன் தன் மகனாயென்று . . . .

* * * *

ஸமஸ்ரீவாதி ஸகல ஸுஜந ஸஹிதராய்(க்)கொண்டு . . .

ஸகலலோக ஹிதகாரஜ: என்று ப்ரதிஜ்ஞாதமான பதினாலு வருஷமுங் கழிந்து அஞ்சாநாள் ஸ்வாச்ரமத்திலே யெழுந்தருளி, முனிவசன ஸந்துஷ்டராய்க்கொண்டு நந்திக்கிராமத்திலே யெழுந்தருளி(ப்) பரதாழ்வானை ஆச்வஸிப்பித்து க்ருதக்ருத்யராய் எழுந்தருளியிருந்தாரென்று பூர்வ ஸர்க்க ஸங்க்ரஹ கதை.

ஸிரஸ்யஞ்ஜலிமாயாய கைகேய்யாநந்தவர்தந: |
பபாஷே ப்ராதரம் ஜ்யேஷ்டம் ராமம் ஸத்யபராக்ரமம் ||

கைகேயிக்கு ஆனந்த வர்த்தகரான பரதாழ்வான், திருமுடியிலே அஞ்சலி பண்ணக்கொண்டு ஜ்யேஷ்டப்ராதாவாய், ஸத்யபராக்ரமசாலியான பெருமாள் ஸந்நிதியிலே ஒரு வார்த்தை விண்ணப்பஞ் செய்கிறார்.

பூஜிதா மாமிகா மாதா தத்தம் ராஜ்யமிதம் மம |
தத்ததாமி புநஸ்துப்யம் யதா த்வமததா மம ||

தேவரீர் வனவாசத்துக்கு எழுந்தருளினதிறலே என்னுடைய தாயார் மிகவும் பூஜிக்கப்பட்டாள். தேவரீர் அடியேனுக்குத் தந்த ராஜ்யத்தை அடியேன் மறுபடி தேவரீர் பொ[று](ரு)ட்டு ஸமர்ப்பிக்கிறேன். அங்கீகரித்தருளவேணுமென்று விண்ணப்பஞ் செய்கிறார்,

End :

யதார்ஹம் பூஜிதா: ஸர்வே . . . . ஸர்வே ஜக்மு-
ர்யதாகதம் ||

அநந்தரம் அக்லிஷ்டகர்மாவான பெருமாளாலே நன்றாக(ப்) பூஜிக்கப்பட்டபேர்களாய்க்கொண்டு சுக்ரீவ விபீஷண ஜாம்பவ ப்ரப்ருதிகளான ஸகல வானரமுதலிகளும் தங்கள் தங்கள் ஸ்தானங்களைக் குறித்துப் பயணம் புறப்பட்டார்கள். . . . .

ஸம்ப்ரஹ்ருஷ்டா வாநரஶ்ரேஷ்டா ராகவேண விஸர்ஜிதா: |
பூஜிதஶ்சைவ ராமேண கிஷ்கிந்தாம் ப்ராவிஶந் புரீம் ||

அநந்தரம் ஸகலமான வானரமுதலிகளும் மகாராஜரும் பெருமாளுடைய திருவபிஷேக மகோத்ஸவம் ஸேவித்துப் பெருமாளே பூஜித்து அனுப்புவிக்கப்பட்டபேர்களாய்க்கொண்டு கிஷ்கிந்தையில் போய்ப் பிரவேசித்தார்கள்.

விபீஷணோऽபி தர்மாத்மா ராகவேண விஸர்ஜித: |
ஸ்வை: ஸஹ நைர்ருதை ராஜா லங்காம் ப்ராயாந்மஹாயஶா: ||

விபீஷணாழ்வானும் . . . . . இக்ஷ்வாகு குல தனமான ஸ்ரீரங்க விமானத்தையும் எழுந்தருளப்பண்ணுவித்துக்கொண்டு லங்காபட்டணத்தைக் குறித்துப் புறப்பட்டான்.

* * * *

ஹ்ருஷ்டாராமஸ்ய சரிதம் ஸம்ஹிதா ருஷிணா க்ருதா |
யே படந்தி நரா: தேஷாம் வாஸ: த்ரிவிஷ்டபே ||

ஆர்ஷமான இந்த ஸ்ரீராமாயண ஸம்ஹிதையை யாதொரு[த்த](வ)ர் பக்தியோடே யேறியருளப்பண்ணுகிறார்களோ அவர்கள் த்ரிபாத்விபூதியான விஷ்ணு என்கிற பரமபதத்திலே சூழ்ந்திருந்தேத்துவர் பல்லாண்டென்கிறபடியே பல்லாண்டுபாடியிருப்பார்கள்.

Colophon :

இத்யார்ஷே ஸ்ரீமத்ராமாயணே ஆதிகாவ்யே ஸ்ரீவால்மீகீயே சதுர்விம்ஶதிஸஹஸ்ரிகாயாம் ஸம்ஹிதாயாம் ஸ்ரீமத்யுத்தகாண்டே அஷ்டாவிம்ஶத்யுத்தரஶததம: ஸர்க:. ஸ்ரீமதே ராமாநுஜாய நம:. ஸ்ரீமதே ஸ்ரீமந்நாராயண மஹாமுநயே நம:.

(கு-பு.)—

இது வான்மீகி ராமாயணத்துள்ள ஸ்ரீராமபிரான் பட்டாபிஷேக ஸர்க்க சுலோகங்களுக்குத் தமிழில் மணிப்ரவாள ரூபமாக வைஷ்ணவ ஸம்பிரதாயப்படி எழுதப்பெற்ற விரிவுரை. இந்தப் பிரதியில் இவ்வுரை முற்று மிருக்கிறது. இயற்றியவர் இன்னாரெனத் தெளிவாகத் தெரியவில்லை.

(*k*) குருபரம்பரைத்தனியன்.

GURUPARAMPARAITTANIYAN.

Foll. 117*a*—118*b*.

See the Sanskrit part of this Triennial Catalogue.

(*l*) காளமேகப்பெருமாள்கட்டியம்.

KĀḶAMĒHAPPERUMĀḶKAṬṬIYAM.

Foll. 119*a*—137*a*. Fol. 137*b* is blank.

Incomplete.

Eulogistic addresses made at the time of anointing the image of God Viṣṇu worshipped under the name Kāḷamēghapperumāḷ in Tirumōhūr, a sacred place near Madura in the Madura district.

Beginning:

பூர்வத்திலே ஸ்ரீயப்பதியாய் ஸகலகல்யாணகுணாத்மகனாய் ஸர்வேஸ்வரனாய், பரமபத நிலயனாய், அயர்வறுமமரர்களதிபதியாய், வீ[த்தி](ற்றி)ருந்தேழுலகுந்தனிக்கோல் செல்ல எழுந்தருளியிருக்கிற ஸ்ரீமந் நாராயணன், தன்னுடைய பரம க்ருபையாலே ஸம்ஸாரி சேதனர்படுகிற க்லேசத்தைக் கண்டு பொறுக்கமாட்டாதே யிரங்கியருளி

*   *   *   *

[illegible]
[illegible]
[illegible]
[illegible] ||

நாயி[ன்றே](ந்தே) ஸுகுணவாரிஹாரஸௌந்தர்யமான அஞ்சன மேனி யழகு பொழிய மஞ்சனமாடி யெழுந்த[று](ரு)ளி நிற்கிற தேவரை உள்ளபடியறிந்து ஸத்தை பெற்றவர்கள், ஒரு இந்திரனாக விண்ணப்பஞ் செய்யா நின்றார்கள். எங்ஙனே யென்னில் :—[illegible] . . . [illegible] அந்த இந்திரனவன் ஸௌமேருவாஸ்யமான ஸ்வர்க்கத்தினுடைய ரக்ஷணத்திலே தீட்சிதனுமாய்

End:

வாங்கக்குடம் நிறைக்கும் வள்ளல் பெரும் பசுக்கள் என்னும்படி பால் வெள்ளமாய் வாசநறுங்குழலாய்ச்சியர் ம[ற்றி](த்தி)னுவோசைபடுத்த தயிர ரவமென்னும்படி தாழி நிறைந்த தயிரைத் தானே நின்று கடைந்து . . .

. . . .

(கு-பு.)—

இது, திருமோகூர் என்னும் விஷ்ணு ஸ்தலத்தில் எழுந்தருளியுள்ள காளமேகம் என்னும் திருமாலின் திருமஞ்சன காலத்தில் சொல்லப்படும் கட்டியம். ஸ்தோத்திர ரூபமானது. மணிப்பிரவாள நடையிலாயது. இந்தப் பிரதியில் முற்றுப்பெறவில்லை.

R. No. 426.

Palm-leaf. 14¾ × 1¼ inches. Foll 32. Lines, 7 in a page. **Tamil. Fair.**

Presented in 1919–20 by Sundarammā of Alwartirunagari.

மகரநெடுங்குழைக்காதர்பிள்ளைத்தமிழ்.
MAKARANEḌUṄKUḺAIKKĀDARPIḶḶAITTAMIḺ.

A kind of Prabandha eulogizing God Viṣṇu worshipped under the name Makaraneḍuṅkuḻaikkādar worshipped in Ten-Tiruppērai. The name of the author is not known ; but he may probably be a pupil or a descendant of Tirumēnikavirāyar or Periya Tiruvaḍikavirāyar whose names are respectfully mentioned at the end of the work.

Complete.

Beginning :

குழைக்காதர் பேரில் பிள்ளைத்தமிழ், காப்பு.

ஊருக்கு மாறுமுகத்தோனொ டைம்முகத்தோனுக்குமுப்
பாருக்கு முப்பத்து முக்கோடி தேவர்க்கும் பார்க்கில்மறை
வேருக்கு நான்முகத் தோன்றனக்கும் வியன்தனைசக்கு ?
மாருக்குந்தானந் திருப்பேரைவல்லிக் கடைக்கலமே (க)

* * * *

வெண்பா.

சொற்சோறுந் தேனொழுகுஞ் சொல்லும் பரிமளிக்குங்
கற்றோர்க ளுவுங் கனியுமே—முற்றுமொரு
மாவலிபால் மூவடிமண் வாங்குந் திருப்பேரைக்
காவலவன் பிள்ளைக் கவி.

பூமாதுகுடிகொண்டு வீற்றிருந்தரசுபுரி
பொற்புலவு பற்மாசனப்
பொழிகருணையொடு பெருகிஞான வெள்ளத்தலை
புரட்டுதிரு முத்திரைக்கைக்
கோமானை யெழுதரிய சதுமறையுமள்ளிக்
கொழித்துவண்டமிழ்(ப்) படுத்திக்
கூறுதிருவாய் மொழியோர் நாலாயிரஞ்செய்த
குருகைமுனியைப் பரவுதுந்

கேமாநறுங்கனித்தேன் மதகினூடு பாய்
திருவழுதிவள நாடனைத்
தென்றிருப்பேரை நகர் காவலனை நூற்றெண்மர்
சிந்தைகுடி கொண்டிருக்கு
மாமாலைவருணன் வந்தடிபரவுமாழி நீர்
வண்ணனைப்புயல் வண்ணனை
வானப்பிரானை நங்குலநாதனைப் புகழும்
வண்டமிழ்ச் சொற்றமிழையவே. (௯)

* * * *

வானுடரும்பொற் பொகுட்டாசனப்பரம
மண்டபத்தினி திருக்கும்
மறைக்கிழவனுஞ் சடைமுடிக்கடவுளுங்குலிச
வச்சிராயுதத்தலைவனும்,
பூ[ஞ](நா)றும்வெட்சியந் தெரியல்புனை குமரனும்
புகர்முகத்தவனு மதியும்
பொங்கு சுடரிரவியுந் துங்கமுனிவரு நெடும்
பொற் கோவில் வலம்வந்து நங்,
கோனுரும் வருணனுராதனை செய்மஞ்சனக்
கொலுவில் வந்தடிவணங்கிக்
கும்பிடுநின்று சேவிபபநற்சேவைபுரி
கோசலைக்கிருக(ண்)மணியே,
தேனுறுபச்சைப்பசுந் துழாய்மேகமே
செங்கீரையாடியருளே
செல்வத்திருப்பேரை வல்லிக்குமணவாள
செங்கீரையாடியருளே.

End :

மருவார்நறுமென்மலர் கொணர்ந்து
வணங்கியிருசேவடி சொரிந்து
மயங்கும் புலன்களைந்து மொன்றாய்
வருணன் செயும் பூசனையுவந்த
திருமாமுகிலே தமிழ்க்குருகுஞ்
செல்வக்குழகா (. .) ட்டயர்ந்து
சிறைவண்டவம்பிக் கண்படுக்குஞ்
செழுந்தார்த் துளவபபுயமுகுந்தா
வருநான்மறை நூற்றெண்மரும்வந்
தங்கீகரித்து வடம்பிடிப்ப
வம்போரு கப்பூந்திருவு மூன்னீ
ரவனித் திருவுமருங்கிருப்பக்
குருமாமணிப்பொன் மருங்கினொடுங்
கொடிஞ்சித்தடந் தேருருட்டுகவே
கொழிக்குந்தமிழ்த்தென் திருப்பேரைக்
கோவே தடந்தேருருட்டுகவே. (௰)

Colophon:

சிறுதேர் முற்றும்.

திருமேனி கவிராயர், பெரிய திருவடி கவிராயர் கு[ரு](ர)வே நம.

(கு-பு.)—

இது தென் திருப்பேரையென்னும் விஷ்ணு ஸ்தலத்தில் கோயில் கொண்டுள்ள மகரநெடுங் குழைக்காதர் என்னும் திருமாலின் தோத்திர ரூபமான தொரு தமிழ்ப் பிரபந்தம். இதில் காப்புப் பதினன்கு செய்யுட்களாலும் செங்கீரை முதலான மற்றையொன்பது பருவங்களும் பப்பத்துச் செய்யுட்களாலுமமைந்துள்ளன. ஆகச் செய்யுளின் தொகை ஒரு நூற்று நான்கு. செய்யுள் நடை நன்றாக விருக்கிறது. இந்நூலாசிரியர் இன்னாரெனத் தெரியவில்லை. நூலின் இறுதியில் திருமேனி கவிராயர், பெரிய திருவடி கவிராயர் எனக் குறிக்கப்பட்டிருக்கின்றமையால், அவ்விருவர் வம்சத்தினர், அல்லது அவர்களின் மாணுக்கருள் ஒருவராக இருக்கலாமெனத் தோற்றுகிறது. இந்தப் பிரதியில் முதலிரண்டு ஏடுகளில் குழைக்காதர் தோத்திர ரூபமான வண்ணமும் இரண்டொரு பாடல்களும் உள்ளன. இந்தப் பிரதியில் இந்நூல் முற்றுமிருக்கிறது. 22, 23 என்னும் எண்ணமைந்த ஏடுகளின் முன்புறம் முறிந்துள்ளது.

R. No. 427.

Palm-leaf. 12¾ × 1⅜ inches. Foll. 16. Lines, 8–10 in a page. Tamil. Good.

Presented in 1919–20 by Sundarammā of Ālvārtirunagari, Tinnevelly district.

(*a*) வைத்தமாநிதிப்பெருமாள்விடுகவிதை.

VAITTAMĀNIDIPPERUMĀḶVIḌUKAVITAI.

Foll. 1—5*b*.

A number of stray stanzas, probably composed by the same author at different times, in praise of God Viṣṇu worshipped under the name Vaittamānidipperumāḷ in Tirukkōḷūr in the Tinnevelly district.

Contains 19 stanzas.

Beginning:

சுவாமி வைத்தமாநிதிப்பெருமாள் பேரில் விடுகவிதை.

விண்ணும் புவனமுங் கொண்டாட மாறன் முன்பேசும் வி[ரி]ரு
தெண்ணும் பொருள் முற்றும் பட்டோலை கைக்கொண்டெழுதி [வெளி(ப்)
பண்ணுந் திறத்தினிற் கைம்மாறுண்டோ நம்பழவடியார்
கண்ணுங்கருத்து நிறைந்தாய் மதுரகவித் தெய்வமே. (க)

விருத்தம்.

துதிதவழுஞ் செழுந்தமிழா லறிவிலரை முகந்திருத்தித் [து](தொ)டர்ந்து வெந்தீக்
கதிதவழுங் கொடு நரகுக்கிலக் காகிய[ளை](லை)வேற்குக் கடைக்கண் பாராய்

நிதிதவழு மடமகளிர் விளையாடு மணிமாட
நீடுமேல் வான்
மதிதவழுந் திருக்கோளூர் வைத்தமாநிதியே
பூமடந்தையானே.

End:

குணங்கித் திரியு மறிவினர் குணத்தை யறிந்துமவர்களுட
னிணங்கித்தனியாய்(ப்) பசிதணிக்கு மியல்பாயலைந்து திரிவேனோ
அணங்கிற் கமுதவடிவழக ளுமென்ற[ழ](ள)கைக் கதிபன் முடி
வணங்கி(த்)துதிக்குந் தமிழ்ப்புகழூர்வாழ்வே வைத்தமாநிதியே.
சரிவண்டிலங்கு முன்கை வனிதையர்க்குள் மயங்கித்தயங்கியன்பு
புரிவண்டனுக்கு ஞானம் புத்திபோதித் தெனையாட்கொள்வாயோ
தெரிவண்டிடங்கா நடுங்கமடுச் சினையாமைமின மீதூரில்
(வரி)வண்டிசை பாடும் புகழூர் வாழ்வே வைத்தமாநிதியே.

(க-பு.)—

இது, திருக்கோளூர் என்னும் விஷ்ணு ஸ்தலத்தில் அமர்ந்துள்ள வைத்தமாநிதியென்னும் திருமால் விஷயமான தோத்திரம். இந்தப் பிரதியில் பத்தொன்பது பாடல்கள் உள்ளன. இந்நூல் முற்றுப்பெற்றதாகத் தோன்றவில்லை. எளிய நடையினுலாயது. இயற்றியவர் பெயர் முதலியன விளங்கவில்லை.

(b) சடகோபதிவ்யசரித்திரம்.

ŚAṬAKŌPADIVYACARITTIRAM.

Foll. 6*a*—16*b*.

A treatise giving an account of Nammāḻvār or Saint Śaṭhakōpa, the author of the well-known Tiruvāymoḻi. The work appears to be subdivided into several Paṭalas. The name of the author is not known.

Contains the Nāṭṭuppaṭala, Nagarappaṭala and breaks off in the Tirukkuruṅguḍippaṭala.

Beginning:

ஹரி ஓம் ; நன்றாக குருவே துணை.

சடகோபதிவ்விய சரித்திரமூலம்.

ஆசாரியர்கள் வணக்கம்.

நீர்மைகொண் மெய் யடியர் பர வடியுஞ் செய்ய
திறங்கொடு பொற் றிருவரை யி னிலவுந் தூசும்
மார்பிலகு மணிவடமுந் திகழ்[மு](பூ)ணூலு
மரைமலர்ச் செங் கரத்தினிடை வளர் முக் கோலுஞ்
சீர்கெழுபாட் டிய முரைத்த பவள வாயுஞ்
சேதனர் பா லருளொழுகு திருக்க ணேக்கும்
ஏர்கொடிரு முகத்தொளியு மிலங்க நின்ற
வெதிராசன் விரைமலர்த் தா ளிறைஞ்சியுய்வாம். (க)

வேறு.

மதுரவின் சுவையின்மேலாய் மறைத்தமிழுரைத்தஞான
வதுலன் தன்சரிதைகூற வருந்துணையாகும் வாசப்
பதுமமேலயற்கு மேனாட் பாலனத் துருவமாகிச்
சதுமறை நவின்றமாயோன் றாட்டுணைக் கமலப்போதே.

வேறு.

மணிகொணெடுந் திரையாழிப் புடவி மாது
மதிமுகவொண் டில தமென வயங்கு மாடத்
தணிதிகழ்தென் குருகையினு வீறன் மாற
னருண்மாரி வைபவமென் னறிவாற் சொலத்
துணிகுவனின் ன முதிலெழு திருவே பிம்பத்
துவரிதழ்ச் செந் தாமரை மேற் றுலங்கு மானே
பணிமொழி மென் குமிழ்மறிந்து குழைபாய் கைவேற்
படைமதர்க் கட் கடையருணீ பாலிப் பாயே. (உ)

(* * * *)

தேனினமுரன் றுபாடு மகிழ்மலர்த் தெரியல்வேய்ந்த
ஞானதேசிகனுரைத்த நான்மறைத்தமிழ்ச்சுடர்க்கு
மேனியைத் தகழியாக்கி மெய்யறிவிடுநெய்யாக்கி
மானிலம் விளங்கச்செய்த வரவரமுனி தாட்கொள்வாம். (கஉ)

அவையடக்கம்.

நந்தணிமகரயாழ்க்கை நங்கையார் குழவி சேர்த்திச்
செந்தமிழ் தனி(ய)னுயேன் செப்புவானெடுத்துக்கொண்ட
ந்தகவ் ககனமீனே யைய மற்றெனுவேனென்ன
வந்தவாறமையுமு[ன்னீ](ந்நீ)ர்கவயக மதனின்மாதோ. (கச)

(* * * *)

அவையடக்கம் முற்றும்.

நாட்டுப்படலம்.

சீர்வளரெதிராசன் பொற்றிருவடிக் கமலம்போற்றிக்
கார்வளர் மேனியெம்மான் கண்ணையுற்றுயிர்களுய்ய
வர்வளர் மாறனகவெழுந் தவதாரஞ்செய்யும்
பார்வளரிசைகொள் செல்வப் பாண்டி நாட்டணிவிரிப்பாம். (க)
உலகெலாந் தனிப்புரக்குமுயர் மழைமுகிற்குழாங்க
ளலைவிலாதரியதிம்ப யோததியெனவான் சென்று
பலவளம்பெருகு தெண்ணீர்(ப்)ப[ற](ர)வைநீர்பருகிச்சூலாய்
நிலவியதாளமீனு நீனிறக்கடல்போன்மீண்ட. (உ)

(* * * *)

கோடினோடந் திகிரியுங் கொண்மொலி
ஈடிருமரைக் கண்ணிடையிற்பசு
மாடுமேவி ம[ரி](றி)கடற் சேர்தலால்
ஓடுமெப்புனல் நாரணனுக்குமால். (௧0)

மலைகளொந்திடை மாதரைச்சேர்ந்துமீ
துலைகுருந்த மொசித்து மருதிற்போய்
விலையுயர்ந்திமொன் பினமேவலால்
அலைகொளப்புனல் கண்ணனையன்னதே. (௧௧)

End:

இவ்வணமகிழ்ந் தினிதிருந்தருள் சுரந்து
நவ்விநயன[து](ம்மு)டைய நங்கையொடு நீலப்
பவ்வவலைசூழ்புவி புரிந்துமுறைசெங்கோல்
செவ்வி தினியற்று பொழுதுற்றதுரைசெய்வாம். (௩௭)

Colophon:

திருநகரப்படல முற்றுப்பெற்றது.

ஆகப்படலமிரண்டுக்குக்கவி அரு. திருஞானமுத்திரை துணை.

திருக்குறுங்குடிப்படலம்.

வெண்டிரைகறங்குங் கடனிலைவரைப்பின்
மிடைந்துயர்ப்பயி . . . டுக்கலியா
மண்டுவெங்கதிரோன் மிக்குடல்வெதும்பி
யழிதராதல கவின்ஞான
மண்டுவிண்மாரிபெ . . . . . தருளிய
ராமாநுசன்றாட்டு (ணை)வணங்கி(க்)
கொண்டல்கண் படுக்குந் தண்டலையுடுத்த
குறுங்குடிப்படல மின்றுரைப்பாம். (௧)

(* * * *)

துப்பித(ம்) . . . . டளவிள முகையணிமுறுவற்
றேருகை நன்னெறியிலோர்மகவைக்
கைப்பெறினேழுபிற(ப்பினு)மியற்றுங்
கடும்பவந்தொலைத்து மாவிரஜைக்
கப்புறமிருத்து மெனிற்புவிதுறந்தா
ரணிய முற்றைம் பொறியடக்கித்
தப்பிலதுடலங் கருகவைந்தழலுட்
டவஞ்செயல்தரும் பயனெவனோ. (௫)

(த-பு.)—

இந்நூல், நம்மாழ்வார் என்னும் சடகோபரது வரலாறு முதலியவற்றை விளக்குவது. நாட்டுப்படலம், நகரப்படலம் முதலாகப் பல படலங்களையுடையது. செய்யுள் நடை நன்றாக இருக்கிறது. இந்தப் பிரதியில் முதலிரண்டு படலங்களும், மூன்றாவதான திருக்குறுங்குடிப் படலத்தின் முதலைந்து பாடல்களுமேயுள்ளன. இது இத்தனை படலங்களையுடையதென்றும் இயற்றியவர் இன்னாரென்றும் விளங்கவில்லை.

R. No. 428.

Palm-leaf. 16 × 1¼ inches. Foll. 76. Lines, 4–8 in a page Tamil. Injured.

Presented in 1919–20 by Sundaramma of Āḻvārtirunagari.

(*a*) சுப்பிரமணியமந்திரம்.
SUBBIRAMANIYAMANTIRAM.

Deals with the Mantra relating to God Subrahmaṇya.

Complete.

Beginning:

ஓங்-ஆங்-அவ்வும். கிருங்-கிறீயுங்-குரோங்-அய்யுங்-கிலீயுங்-குரோங்-கிலீயுங்-சவ்வுங்-சரவணபவ சத்தியுத்தாய் - திரிபுரபவகுக்குடத்துவசாய - திகெ[ள](ழ)ாளிபவ- . . . .

சுப்பிரமணியாய நம ஓம் சரவணபவ.

* * *

பன்னிரு குழையும் பணிபல வாகி
வயிரத் தோடும் மகரகுண் டலமும்.

End:

அண்டர்கள் பிரானார் மைந்தன் அறுமுகனருளுங் செங்கை
கை[ய்]யில் குழையே தென்னில் கந்தன்வேல் தழைத்த[ே]காப்பு.

அய்யர்தா னுண்டநஞ்சை யமுதாக்கிய சஞ்சீவி
மெய்யினில் விசாதிபோக்க வேலவன் தந்தசஞ்சீவி;

அய்யனார் தமையனான மைத்துனனார்
அறுமுகவனார் தந்தசஞ்சீவி காணே.

(கு-பு)—

இது முருகக்கடவுளின் மந்திர சம்பந்தமானது. இந்தப் பிரதியில் முற்றுமுள்ளது.

(*b*) தனிப்பாடல்.
TANIPPĀḌAL.

Fol. 3*a*. Fol. 3*b* is left blank.

A stanza extolling the means of obtaining salvation by the practice of Jñānayōga.

Beginning:

மாடுபுல்(லைத்) தின்றிறந்தாலு முத்தியோ
மரமட்டை தின்றுழலுவீர்
மண்கேமீனமை சலமூழ்கில் முத்தியோ
வருந்தியே சலமூழ்குவீர்,
ஆடுதழை சருகுதின்றிறந்தாலு முத்தியோ
யடவியிற் சருகுதின்பீர்

End:

ஊடுவழியூடுருவி நாடிவழி யூடே
யுள்ளொழுகி மண்டியுயிர்போ
யுறையும்வகை யறியாமலுழலுமவ ருபதேச
[யு](வு)ண்மையிது காணெக்குமே.

(கு-பு.)—

இந்தப் பாடல்; கருமயோகத்தால் மோக்ஷமடைய முயல்வதினும் யோகாப்பியாஸஞ் செய்து முத்தியடைவதே நன்றெனத் தெரிவிப்பது.

(c) விக்கிரமசோழனுலா.
VIKRAMAŚŌḺANULĀ.

Foll. 4*a*—6*b*.

Contains only 31 Kaṇṇis.

Same work as that described under R. No. 279 of the Descriptive Catalogue of Tamil MSS.

(கு-பு.)—

இந்நூல் டிஸ்கிரிப்டிவ் காட்லாக் 279-வது நம்பரில் வந்துள்ளதே. இந்தப் பிரதியில் ஒன்றுமுதல் முப்பத்தொரு கண்ணிகளே யுள்ளன.

(d) கம்பராமாயணப்பாடல்.
KAMBARĀMĀYAṆAPPĀḌAL.

Fol. 7.

Contains only three stanzas from the well-known Kambarāmāyaṇa.

(கு-பு.)—

இதில் கம்பராமாயணப் பாடல்கள் மூன்றேயுள்ளன.

(e) தனிப்பாடல்.
TANIPPĀḌAL.

Fol. 8*a*. Fol. 8*b* is left blank.

Contains two stray stanzas.

(கு-பு.)—

இதில் இரண்டு பாடல்கள் உள்ளன.

(f) எம்பெருமானார்நெஞ்சுவிடுதூது.
EMBERUMĀNĀRNEÑJUVIḌUTŪDU.

Foll. 9*a*—14*b*.

Fol. 15*a* contains a stanza of an astrological nature. Fol. 15*b* is left blank.

An artificial poem of the Śabda-citra variety, extolling the greatness of Rāmānuja.

Incomplete.

Beginning:

எம்பெருமானார் நெஞ்சுவிடு தூது.

சீதார்ந்த வண்கருணைச் சீபெரும்பூ தூர்முனிமேற்
றாதார்ந்து நெஞ்சுவிடு தூதினுக்கு—வாதார்ந்த
வஞ்சமல மில்லா மகிழ்மாற னுருடைய
கஞ்சமலர்த் தாளிணையே காப்பு.

வாதியரை வென்றுதினம் வாழ் பெரும்பூ தூர்முனிமேற்
சோதிவிடு நெஞ்சுவிடு தூதினுக்கு—நீதியுடன்
வாழ்வா னதுபெருகும் வண்குருகூர் மாறன்முத
லாழ்வார்கள் தாளே யரண்.

கற்றவர்தங் கண்ணுடி(க்) காதிவரும் வாதியரைச்
செற்றுவரும் வேதாந்தச் சிற்குய—னற்றவர்சே
ரேதமொன்று மில்லா வெதிராசன் சேவடிக்கே
தூதுவிட்டே னெஞ்சைத் துணிந்து.

*   *   *   *

சீரார் செழுங்கமலச் சேயிழையார் சேர்ந்திலங்குங்
காரார் திருமேனிக் கண்ணபிரான்—ஏராரு
முந்திக் கமலத்து நான்முகனை யுண்டாக்குஞ்
சிந்திக்குங் கார(ண)மே சித்தமே—வந்திதன்
னெஞ்சமே நீயென்னை நேராகக் கைவிட்டாற்
றஞ்சமே யாகுந் தகைமையார்—அஞ்சலெனத்

End:

. . . . மறைகொள்ளும்
வேதியர்த மூர்தோறும் வெற்றிக் கொடிபுனைந்து
வாதியரை வெல்ல வருந்தாதே—

(கு-பு)—

இது, வைஷ்ணவ ஸித்தாந்தப் பிரவர்த்தகராகிய இராமாநுஜர் விஷயமாக வியற்றப்பட்ட ஒருவகைப் பிரபந்தம். அவரது பக்தருள் ஒருவர், அவரை அடைய விரும்பித் தமது மனத்தைத் தூது செல்ல விடுத்ததாக வமைந்துள்ளது இந்நூல்; இந்தப் பிரதியில் இது முற்றுப்பெறவில்லை, இயற்றியவர் இன்னாரெனத் தெரியவில்லை. 15-வது ஏட்டின் முற்புறத்தில் பஞ்சபக்ஷி சாஸ்திர விஷயமான பாடலொன்று எழுதப்பட்டுள்ளது.

(g) கம்பராமாயணப்பாடல்.
KAMBARĀMĀYAṆAPPĀḌAL.

Foll. 16*a*—19*a*.

Contains certain stanzas taken from certain Paṭalas of the Kambarāmāyaṇa. The names of these Paṭalas are Mitilaikāṭcippaṭala, Kārmukappaṭala, Sētubandanappaṭala.

(கு-பு.)—

இதில், மிதிலைக்காட்சிப் படலம், கார்முகப்படலம், சேதுபந்தனப்படலம் ஆகிய விவற்றினின்று எடுத்தெழுதப்பட்ட சில பாடல்களுள்ளன.

(h) தனிப்பாடல்.
TANIPPĀḌAL.

Fol. 19b.

A collection of certain select stanzas. The first of these stanzas is in praise of God, stanzas 2 to 4 are in praise of Nammāḻvār; stanza 5 gives the names of some of the sacred shrines dedicated to the worship of God Viṣṇù.

Beginning:

கடத்தடக்கைக் கோட்டுக் கதத்தத்தி செற்ற
இடத்தடக்கைக் கோ(த்திரத்)தைச் செப்(பா)—(தடற்பிடி)க்குப்
பிச்சித் தொடைசூட்டிப் பெற்றதே தப்பேதைக்
கிச்சைத் தொடை கொடாதே. (க)

End:

குடந்தை குருகூர் குறுங்கை யன்பிலா
வி_ந்திகழ் புல்லாணிறைக்கூர்?—மடம்பூண்
டரதீன்ற? கஞ்ச வனந்தேவி வாணிக்
கிரைநூல் மாகிரஞ் சூமோ? (ரு)

(கு-பு.)—

இதில் 2, 3, 4, எண்ணமைந்த மூன்று வெண்பாக்கள் நம்மாழ்வார் துதியாகவும், 5-வது வெண்பா விஷ்ணு ஸ்தலங்களின் பெயரை யுணர்த்துவதாகவும், முதலது கடவுள் தோத்திர ரூபமாகவும் அமைந்துள்ளன. இயற்றியவர் இன்னாரெனத் தெரியவில்லை. ஈற்றதாகிய வெண்பா மிகப் பிழையுடன் காணப்படுகிறது.

(i) கழிநெடிலாசிரியவிருத்தம்.
KALINEḌILĀŚIRIYAVIRUTTAM.

Fol. 20a. Fol. 20b is left blank.

Expresses herein the supplicant's desire to become the servant of God Śiva who is herein requested to protect the supplicant from being led away by the tempting allurements of wicked women.

Beginning:

கொங்கையால் விழியா லெவனையு மருட்டிக்
கூடியே யவன்கையிற் பணத்தை(யும்) பறித்துக்
கொள்ளைகொண் டதற்பின் வகையில்லை யென்றால்
கொட்டிக்கொண் டவன்கையி லோட்டையுங் கொடுத்துப்

*   *   *   *

End :

சங்கரா மருதம் பிடைதனி வமய ? மநத்ததகையா வுடைத்
தலைவனே கருவூர் முனியுடன் பேசிய சம்புவே சாந்தநா யகனே.

(கு-பு.)—

இச்செய்யுள், பக்தரொருவர், துட்டவேசையர் மீதுண்டாங் காதலை மாற்றித் தன்னை யாட்கொள்ளுமாறு சிவபிரானை நோக்கிப் பிரார்த்தித்ததாக வமைந்துள்ளது.

(i) ஆழ்வார்திருவனந்தல்.
ĀLVĀRTIRUVANANDAL.

Foll. 21*a*—23*a*. Fol. 23*b* is left blank.

A poem in praise of Saint Śaṭhakōpa, also well-known as Nammāḻvār. The poem is in the form of lullaby songs sung to make Nammāḻvar go to sleep. The name of the author is not given.

Beginning :

பொருவரிய தவநிலை புரிந்தரியை வாழ்த்துவோர்
புரவியரி கதி[ர]ருதய மாகுமுன் குணபாலி
னருணவுதை யங்கண்டு தண்பொருனை நீரி[ல்]
[நீரா](வா)டியிசை பாடிநின் சந்நிதியி லே[ற்ற](த்த)லாற்
கருணைமழை பொழிமேக மேதிரு வனந்தலோ
கமலநய நாரவிந் தா(?)திரு வனந்தலோ
திருவழுதி வளநாட னேதிரு வனந்தலோ
செண்பகச் சடகோப னேதிரு வனந்தலோ. (க)

End :

கொங்கலரு மணிமுறுக் குடையநறை மழைதூவு(ங்)
குமுதமுகை யாகவிது வுடலமும் வெளுப்பவே
சங்கின முழங்கவண் டிசைபாட மயிலேறி
தனதுகொடி யொடுகெருங் கொடிபல விசைத்ததால்
நங்கையக மகிழ்மாற னேதிரு வனந்தலோ
நாவணர்தம் பிரா னேதிரு வனந்தலோ
செங்கமல மலராச னுதிரு வனந்தலோ
செண்பகச் சடகோப னேதிரு வனந்தலோ. (கூ)

தென்குருகை மகிழ்மாற னேதிரு வனந்தலோ
செண்பகச் சடகோப னேதிரு வனந்தலோ.

(கு-பு.)—

இது, திருக்குருகூரில் அவதரித்த நம்மாழ்வார் என்னும் சடகோபர் விஷயமான தோத்திரம். "செண்பகச் சடகோப னேதிரு வனந்தலோ" என்பதை மகுடமாக வைத்துப் பாடப்பட்டுள்ள டன்னிரண்டு பாடல்களாலாகியது. இந்தப் பிரதியிலுள்ள இவ்வேடுகளிரண்டும் நுனி முறிந்துள்ளன. இதனை இயற்றியவர் இன்னாரெனத் தெரியவில்லை.

(k) அழகரகவல்.

ALAGARAHAVAL.

Fol. 24.

A kind of poetic composition called Ahaval in praise of God Viṣṇu worshipped under the name of Aḻagar in Tirumālirumśōlai, near Madura. God Aḻagar is conceived as Lord and the person wishing to attain salvation is conceived as falling in love with God and this work is allegorical in nature.

Beginning:

தோயுங் கல்வித் துறைமுடிவு நிரம்பி
யாயுங்கலைக ளறுபத்து நான்கு
மாசறவுணர்ந்த தேசுபுரி கொள்கை
சிலச்சொலும் பான்மை நலத்தகை . . . .
மின்னவிர் கிரணப் பொன்னுலகு நீங்கு

End:

பனைக்கை வெண்மருப்பு நினைத்து நின்றியங்கியும்
பின்னியிடைவிடாத பன்னக முயங்கியுந்
தடமயங்கு சின்னெறி மட . . . . ட்டால்
வரைத லன்றி வருத
லுரைபகர் முறையோ வுணர்ந்தரு ணீயே.

சிலம்புதித்துறைவன் திருவடிகளே சரணம்.

(கு-பு.)—

இவ்வகவல் திருமாலிருஞ்சோலை அழகர்மீது அகப்பொருட்டுறை யமையப் பாடப்பட்டுள்ளது. செய்யுள் நடை நன்றாகவுளது. இயற்றியவர் இன்னா ரெனத் தெரியவில்லை.

(l) தனிப்பாடல்.

TANIPPĀḌAL.

Fol. 25*a*. Fol. 25*b* is left blank.

A collection of stray unconnected stanzas.

Beginning:

மானே கிளியே மயிலே குயிலே வரிவண்டே
கானே சுனையே கழையே வழையே கனியாறே
யானே றுடையா . . . . . . சென்றடையார் போ
லூனே வருமே யுயிரோ வெனுமே யுய்யாவே.

* * * *

* * * *

உத்தமன் மூத்தானத்தினிடத் தோருற்பல
மற்றோருயர் மாதை
வித்தகனெத்தானத் திலுறிற் போன் வெற்பு
நெறிக்கே மீ[ழ்](ள்)வானே
சித்ரமுலைக்கே முத்து நகைக்கே செற்று தழற்கே
திருவான[ப்]
பத்திவிழிக்கே நெய்த்த கவிற் கேபட்ட
றுதற் கேபட்டே[ா]னே.

* * *

சங்கு துயில்கின்ற வெண்கமல மொன்று
தண்கலைமடந்தை தருமாதைப்
புங்கவன்விளங்கு பம்பை நதி வந்து
புந்திமகிழ்கின்ற புள்ளீரே
யெங்களுயிரென்று மூங்களுயிரென்று
மிங்ஙினிவி . . . .
. . . .
. . . .

(கு-பு.)—
இவ்வேட்டில் சிற்றின்ப விஷயமான ஐந்து பாடல்களுள்ளன.

(*m*) நிகண்டு.

NIGAṆḌU.

Foll. 26*a*—29*a*. Fol. 29*b* is left blank.

A lexicon of synonymous words. Contains the words from அ to ஐ. The work appears to be different from Divākaram and Piṅgaḷam though it resembles them in several places.

Beginning:

பதினொன்றுவது ஒரு சொற்பல் பொருட் பெயர்த்தொகுதி.
அமரருங் கவிகளுமாடுவோரும் பாடுவோரும்
பொரு நருமறிஞரு(ம்) புலவரெனப்படுமே.
அலரி பூமலருமருக்கனு மாகும்.

End:

ஏவல்வியங்கோளு மாணையு மாகும்.
ஏற்றல் கோடலு மெதிர்ந்து பொருதலும்.
ஏணேவலியு நிலையு(டை)டைமையுமாகும்
ஏவல்மெய்ப்பாடு வாஞ்சனை சூளே
யாவையு(ம்) விறல் செயலு மாணைக் கிளவி
ஏனைய தொழிவு மிடைச் சொல்லுமாகும்.
ஏணியுலகு மெல்லையுமாகும்.
ஐயம் பலியுமோர் தலுமாகும்.

(கு-பு.)—

இது, சேந்தன் திவாகரம், பிங்கலம் ஆகிய இவற்றினும் வேறுகியும் சிற் சிலவிடத்து ஒப்புமையுடையதாகவு மிருக்கிறது. இந்தப் பிரதியில் அகர முதல் ஐகாரம் வரையுளது. இயற்றியவர் இன்னாரெனத் தெரியவில்லை.

(n) தனிப்பாடல்.

TANIPPĀḌAL.

Fol. 30.

Contains 4 stray unconnected stanzas. Two stanzas deal with errotics, one stanza gives the names of the 9 wives of Jīvakan and the other stanza is in praise of a wealthy person named Kōnēriyappan.

Beginning:

மாவுறங்கின புள்ளுறங்கின் வண்டுறங்கின தண்டலைக்
காவுறங்கின வின்ன மென்(ம)கள் கண்ணுறங்கில[ல்] (ள்)கையணைக்
கோவுறங்கு கடத்தலைக்குல தீபவள்ளை குதட்டநின்
ருவுறங்கு புகாரசஞ்சல வஞ்சலென்னவடுக்குமே.

End:

உற்பாதகமா யொருமுத வென்றேரகத்தே
திற்பாரிருந்த திருநெல் வேலி நாடனையீர்
சொற்பாலனையவுங்கள் தோகை தோழ(ற்) சேருதற்குப்
புற்பாய் பரியாகப் போதக் கடவேனே.

(கு-பு.)—

இதில் சிருங்கார விஷயமான பாடல் இரண்டும், ஜீவகன் மனைவியர் ஒன்பதின்மர்பெயரையுணர்த்தும் பாடலொன்றும், கோனேரியப்பன் என்னும் பிரபுவின் விஷயமான பாடலொன்றும் ஆக நான்கு பாடல்களேயுள்ளன.

(o) ஆழ்வார் துதி.

ĀLVĀRTUDI.

Foll. 31a—32a. Fol. 32b is left blank.

Contains 8 stanzas in praise of Nammāḻvār of Tirukkuruhūr; stanzas 5, 6 and 7 are the same as those found in subdivision (h).

Beginning:

பேழ்வாய் மறலியிங் குன்றுவென் மேல்வரும் பெற்றி முற்றுந்
தாழ்வாயல்லாது பலிக்குங் கொல்லோ சகதண்டமுட்ட
வாழ்வார்பரம்பரையாய்த் தமியேன் பொன்மதிட் குருகை
யாழ்வார்க்கடிமை பொலிந்து நின்ருருக்கு மப்படியே. (க)
ஒன்றுமிரு வினைமும்மையு மேற்ப தொழிந்திட நான்
குன்றும்படிக்கை வராறெழுகா தெழுகோளையெட்டி
னின்றுமிருந்துங் கிடந்தொன்பதாகி நிறைந்த பெம்மா[ன்]
னென்றும் பதி(ன்)மர்தொழுங்குரு கூரில்வந் தெய்துவனே. (உ)

End:

வௌளவீரவாழியோ வீயாவயலீர்வா
ள(வ்)வீரவேல் விழியோ வாள வா ளாழ்வாரே
யல்லொழியா யழியாயுயிரா யிளவா
வல்லே வருவீர் வரில்

இது இடையினப் பாட்டு இடையினம் ய, ர, ல, வ, ழ, ள வெனவாறே.

கோக்காக்கைக் காகாக் கூக் கூக்கைக்கக் கொக்காக்கை
காக்கைக்கே கூகைக்குக் கைக்காக்காக்—காக்கைக்காக்
கைகைக்கோக் கைகை(க்)கைக் [க]கூக்காக்கை கேகாக்கோக்
கைகைக்கே கூக்காக்கை கை.

(கு-பு.)—

இது திருக்குருகூர் நம்மாழ்வார் மீதுபாடப்பட்டுள்ள சில சித்திரக்கவிகள் அடங்கிய துதி. முதலில் மூன்று கட்டளைக் கலித்துறைகளும் பின்னரைந்து வெண்பாக்களுமாக எட்டுப்பாடல்களையுடையது. 5, 6, 7, பாடல்கள் இந் நெம்பர் (h)ல் வந்துள்ளவைகளே.

(*p*) கோவைசாரம்.

KŌVAISĀRAM.

Fol. 33. Foll. 34*a*—40*b* are left blank.

Contains some important and select stanzas taken from Tañjaivāṇankōvai and other such works. Contains 1 to 9 stanzas and a portion of the 10th stanza.

Beginning:

கோவைசாரம்.

மாவின் கொழுந்தளிரீன்று பொற்கோங்கிடை வந்தரும்பி
மேவுங்கமல மலர்ந்தல்லி பாய் விம்முதேன் பொதிந்து
தாவுஞ் சிலவரி வண்டினங் கொண்டு தளைய விழ்பூங்
காவின்புறம்படர் வல்லிகண்டேகண் க(ளி)க் கின்றதே. (க)
காழ்பட்டகண்டா கடம்பாடவி நின்ற கன்னியிட
மூழ்பட்ட தெண்டிரையோ வரையோ பொன்னுலகு மற்றே
வீழ்பட்டதாமரையோ விவர்தாமிங்குமேவ வங்குப்
பாழ்பட்ட தெவ்விட மவ்விடம் யாதென்று பார்த்திலமே. (உ)

End:

செறிவே[ள](ழ)வெஞ்சிலே வேள்தஞ்சை வாணன் றிருந்தவர்மே
லெறிவேலெவென்ற கண்ணெனன்னுயிர்க் கேவியிருண்டறல் போல்
நெறிவேயல(ங்)கல் முடித்தலே சாய்த்திங்[க](ங)ளிற்பதுதா
னறிவேயறிந்தவுனக்கலர் மாளிகை யாரணங்கே. (க)
வழுதியர் நாமம் வளர்க்கின்ற வாணன்றென் (மாறை வண்டு)

(கு-பு.)—

இது, தஞ்சை வாணன் கோவை முதலிய கோவை நூல்களினின்று தொகுக்கப்பட்டுள்ள சாரமான பாக்களையுடையது எனத்தோற்றுகிறது. இந்தப்பிரதியில் 1—9 பாடல்களும், பத்தாவதன் முதலடிமட்டுமேயுள்ளன.

(g) மாறன்கலம்பகம்.

MĀRANKALAMBAKAM.

Foll. 41a—68b.

A kind of Prabandha called Kalambakam dealing with the greatness of Nammāḷvār. The author's name cannot clearly be made out but he appears to be a Vaiṣṇava Brahman of Tirukkuruhūr.

Beginning :

கார்பூத்த மேனிக்கரிய நெடுமால் மார்பிற்
சீர்பூத்தகஞ்சத் . . . . . கந்தொழுங் கருணைப்
பார்பூத்ததிருக் குருகைப்பதிவாழு நாவலவன்
வார்பூத்தகோ . . . .
. . . . மிலங்கத்
தார் பூத்தகுழல் மட(வா)ர் தண் கவரி தான் வீசக்
கோடாதசெல்வக் கொழுங் கொ . . . .
. . . . , திருப்புளிக் கீழ் வீற்றிருக்கு
மாறன் பொருனை வழுதி வள நாடான்
. . . . தான்றயங்க
வன்பான நூற்றெட்டு வாலையத்தே . . .
. . . .
. . ரன் பாருலகுதரப் பொன்னுலகின்
ம . . . . ;
. . . . . . ; மாறனே கேட்டருளீர்.

தாவுமுற்றும்.

தேவாதி தேவர் தொழுந் செல்வத் திருக்குருகை
. . . . மாறனே. (க)

* * * *

அருள்பெறு சதுமறையது தமிழெனவுரை
பொருள் பெற நினைவொடு புயலென வுதவினே. (க)
இமையவர் ெ . . . . . . துகையிலு தவினே
யமையவுமறை தமிழது வென வருளினே. (உ)
மருவியகுருகையிலொரு முதலெனவளர்
குரு . . . . வருள் குறையறவுத வினே. (ந)
கலியுகவாதரு மிவரென வுலகினின்
மெலிவற வளர்புரி மிகு திமுன் மருவினே. (ச)
. . . பொழிலுறை குருகையிலருள் பெறு
சதுமறை விழைவது தழையவு முதவினே. (ரு)

இவையைந்துமாரகம்.

End :

கலித்துறை.

ஆரையராவும் விழியான தென்னெஞ்சயர்ந்துவிட
வாரை . . . . மடவீர் மகிழ்மாறர் வெற்பிற்
றூரையராவுங்குழல் சோரமேகலை தானவிழப்
பே ரையராவுங் கலவியெ [ன்ற](ந்நா)ளும் பொறுக் . . . .

வெண்பா.

எ[ன்ற](ந்நா)ளுமிச் செனன மெடுத்துவாட் கொண்டு
பன்னாட் பரமபதம் பாலிப்பாய்—முன்னாளின்
மூண்டவினைபோ . . . . . . வ[ய](வ)ாழ்வாரே
யாண்டவனே நின்ற ளருள். (கக)

கலித்துறை.

பேர்வாழி சொன்ன கலம் பகம் வாழிப்பெருமறை நூற்
சீர் . . . . . . மையங்கள் வாழி திருநகரி
யூர்வாழி நற்றமிழ் நாவாணர் வாழியுலகனைத்துங்
கார்வாழி ஞானச் சடகோபர் வாழியெக் காலமுமே. (ஈ)
தெய்வநாயகன் திருவடிகளே சரணம்.

Colophon :

சுவாமி ஆழ்வார் திருவடிகளே சரணம்.

பாவே(ய்)தமிழன் குரு கூரன் வேதம் . . . வுரைத்த
தாவேதமென்ற தனுட்பொருள் யாவுந் தரந் தெரிந்து
மாவேதரணிக்குள் மேலாம் பரனெனு மாறனையிக்
காலே தடையின்றிப் போற்று நெஞ்சேயக்கதி பெறவே.

(கு-பு.)—

இந்நூல் திருக்குருகூர்ச் சடகோபர் விஷயமானதொரு வகைப் பிரபந்தம். நடைநன்றாக விருக்கிறது. இந்தப்பிரதியின் ஏடுகளிற் சில முறிந்துள்ளமையால் இடையிடையே சிலசில பாகமில்லை. நூலாசிரியர் திருக்குருகூரிலிருந்த ஒரு ஸ்ரீ வைஷ்ணவரென்று தெரிகின்றதன்றி, அவரது பெயரைக்குறிக்கும் செய்யுளேடு முறிந்துள்ளமையால் பெயர் நன்கு புலப்படவில்லை. இந்தப் பிரதியில் இந்நூல் முற்றுமிருக்கிறது.

(ஏ) மாறன்பதிகம்.

MĀṞANPADIKAM.

Foll. 69*a*—71*b*.

A poem in ten stanzas in praise of Māṟan, also called Saint Śaṭhakōpa or Nammāḻvār.

omplete.

Beginning :

இனமுறவரவே தொழுவெதிர் செலவே
[வி](யி)ரு விழி புனலோ வடிவது விலகா
ரனமெனு நடையார் துயரதுபெ . .
. . பவரெவரோ விதிவசமெனவே
கனமதுவயர்வே கருதவும் வசமோ
கருணையின் மகிழ்மாறரு மொழி . . .
மனமுறுகுரு காபுரி சடகோபர்
மலரடி துணையே வகுப்பதுதினமே (க)

End :

மனதினிலிருப்போர் வண்சடகோபர்
வகுளாபரணர் வளர்புளி வாசர்
கனதையில் திருவாய்மொ(ழி) . . . வோர்
காரணர் மாடத்திருக்குருகூரர்
தனதிடம் வேதத்தமிழாகரனூர்
தாயும் பொருளைத் திருச் . . . கணி
. . . . ரிமையோர்குருபரர்
இலைக்கொரு தெய்வமா நமைப்பாடெனவே. (ம)
சுவாமி ஆழ்வார் திருவடிகளே சரணம்.

(கு-பு.)—

இப்பதிகமும் திருக்குருகூர்ச் சடகோபர் விஷயமானதே. இந்தப் பிரதியில் முற்றுமிருக்கிறது. நூலாசிரியர் இன்னாரெனத் தெரியவில்லை.

---

(8) நம்மாழ்வார்துதி.

NAMMĀḺVĀRTUDI.

Foll. 72*a*—74*b*.

Similar to the above.

Incomplete.

Beginning :

இந்தமதிகாய வெந்துசருகான தெந்தவகை பாவமே
வந்தசடகோபர் தந்தமகிழ் மாலை . . . சூடவே
சிந்தமதராய னின்றுகணை தூவு சிந்தையயர்வாகுவே
கந்தமலர் வாவிதண்பொருனை . . . . (க)
அத்தியிற் பெருத்தசித்திர மொத்த நற்றனத்தி நட்பு
மற்பமர்ச்சனைக்கு ளொப்ப . . யிர்ச்சிமிக்கவுற்றபட்ச
மொத்த புத்திபட்டுழற்று மக்கிர முற்றதே
சித்திபெற்றதற் பரற்குளி . . ட்டி மட்டளித்த சித்த.

End :

நேசம் விரும்பிய . . நீதி புகுந்தன்ர்தாள்
பூசைவிரும்பிய தேசுபரம் பரபோதமடர்ந்தவனே
யாசரு . . . விரும்பியயாதியர் தன்பத மேல்
வாசமெனுந் தொடையாகிய நம் . ளி மாமகிழ்தி . . . . . (ம)

(கு-பு.)—

இப்பதிகமும் சடகோபரது தோத்திரரூபமானதே. ஏடுகள் சிதைந்துள்ளமையால் சிற்சில பாகமில்லை. இயற்றியவர் இன்னாரெனத் தெரியவில்லை.

R. No. 429.

Palm-leaf. 11¾ × 1⅛ inches. Foll. 84. Lines, 8—11 in a page. Tamil. Slightly injured.

Presented in 1919-20 by Sundarammā of Alwartirunagari, Tinnevelly district.

(*a*) மதுரகவியாழ்வார்பேரிற்கவிதை.

MADURAKAVIYĀḺVĀRPĒRIṞKAVITAI.

Fol. 1*a*. Fol. 1*b* is left blank.

A poem in praise of Madurakaviyāḻvār, the disciple of Nammāḻvār or Saint Śaṭhakōpa.

Contains 4 stanzas, two stanzas of which being written in Veṇbā metre and the remaining two belonging to the Kaṭṭaḷaikalitturai variety.

Beginning:

மதுரகவியாழ்வார்பேரிற் கவிதை.

வெண்பா.

புவிப்புலவர் வாழ்த்தும் புகுமூர் மதுர
கவிப்புலவர் ஞானக் கனியே—செவிக்கு
முழுதுந் தெளியமுதே முக்கனியே முன்னீ
யெழுதுந் தமிழா யிரம். (க)

கலித்துறை.

விண்ணும் புவனமுங் கொண்டாட மாறன்முன் வேதம் விரித்
தெண்ணும்பொருள்முற்றும் பட்டோலைகைக்கொண்டெழுதிவி[ள்](ழி)
பண்ணுந்தரத்தினிற் கைமாறுண்டோ நம்பழவடியார்
கண்ணுங்கருத்து நிறைந்தாய் மதுரகவித் தெய்வமே. (உ)

End:

வெண்பா.

போற்றினேன் மாயப் புலைச்சள மத்தனையு
மாற்றினே னந்தாம வாழ்வுபெற்றேன்—ரேற்றும்
விதுரனிடஞ் சென்ற விருந்தனடி யேத்து
மதுரகவி தாட்டா மரை. (ச)

(கு-பு.)—

இது, திருக்கோளூர் என்னும் திவ்ய க்ஷேத்திரத்தில் அவதரித்து நம்மாழ்வாரை ஆசாரியராக அடைந்த மதுரகவியாழ்வார் விஷயமானது. இரண்டு வெண்பாக்களும், இரண்டு கலித்துறைகளுமாக நான்கு பாடல்களே இதில் உள்ளன.

(*b*) மாறன்சிங்காதனக்கவிதை.

MĀṞANSIṄGĀDANAKKAVITAI.

Foll. 2*a*—4*b*. Fol. 5 is left blank.

A poem in praise of the throne on which Nammāḻvār is sitting in Tirukkuruhūr or Alwartirunagari.

Contains 12 stanzas.

Beginning:

சிங்காதனக்கவிதை.

மாறன் சிங்காசனமான தவாவியவ்வாவியி[ல்த்](ற்)றே—
னூறுஞ் செந்தாமரை பொன்மேனியம்மல ருற்றுநறை
யாறென்கலாந் திண்புயமாலைபூம் பொருட்டையன்முக
வீறென்கலா மதிற்க[ஸ்]த்தூரி நாமம்விளரி வண்டே. (க)

குடிவாழநங்கை குடர்வாழத்தென்குரு கூரினம்பி
வடிவாகநீவந்த வாறுகண்டோமகிழ் மாறநின்பொன்
னடிவாழ்வுபெற்ற பொற்சிங்காதனந் தனக்கம்முதற்பேர்
பிடியாதபேரென் றுடசேஷயரியணைப் பேர்பெற்றதே. (உ)

* * * *

End:

வெண்பா.

சிந்தையினுஞ் சென்னியினுஞ் சேர்த்தினேன் பெற்றெடுத்த
தந்தையினுந் தாயினும்வந் தாதரித்தான்—செந்தமிழ்நா
வீறன்சிங் காசனத்தில் வீற்றிருக்குங் காரிமகிழ்
மாறன் பதத்தா மரை.

* * * *

விருத்தம்.

பன்னகாசனத்தர் திருமாலாதி நாதனையே பாடிப்போற்று
மன்னவாகனமாற ரடியிணையைத் தொழுதோறு மதனுலன்றோ
வன்னமாமணியழுத்து [நவரெற்றி](ரத்)ன[ச்] சிங்காசனத்தில்வரு மகி
[மைகாண
வென்னமா தவம்புரிந்தான் தென்புதுவூர் மதுரகவி யெம்பிரானே. (மஉ)

(கு.பு.)—

இது, நம்மாழ்வாருடைய சிம்மாசனத்தின் சிறப்பை விளக்குவது. முத லில் 4 கட்டளைக்கலித்துறையும் இரண்டு ஆசிரியவிருத்தங்களும், சந்தவிருத்த மொன்றும், அறுசீர்க்கழிநெடில் விருத்தமொன்றும், கலித்துறையொன்றும், வெண்பாவொன்றும், கலித்துறையொன்றும், விருத்தமொன்றும் ஆகப் பன்னிரண்டு பாடல்களையுடையது. 6-வது ஏட்டின் முன்புறத்தில் திருக்குரு கூர் ஆதிநாதசுவாமி 8-வது உற்சவமாகிய குதிரைவாகனச்சிறப்பின் 5-வது பாடலின் பிற்பகுதியும் ஆறுவதுபாடலும் எழுதப்பட்டுள்ளன.

(c) குருந்தவாகனக்கவிதை. OURUNDAVĀHANAKKAVITAI.

Fol. 7*a*. Fol. 8 is left blank.

During the festival of Nammālvār, celebrated in Tirukkuruhūr, the image of Nammālvār is placed on a vehicle resembling the Kurundai tree and is carried in procession through the streets and the stanzas are in praise of the vehicle representing the Kurundai.

Contains 3 stanzas.

Beginning:

கலித்துறை.

அருந்தரிதாமொலி நீராழிசுற்று மவனியெல்லாம்
வருந்தி யலைந்துழலா துனைப்போற்ற மகிழ்ந்தருள்சேர்
பொருந்தியதென் குருகா புரிவாழப் பொலிந்துயர்ந்து
குருந்தேறி வீதிவரு மச்சுதானந்த கோவிந்தனே. (க)

End:

கருவரிவேல்விழிக் கார்முகில்கூந்தனற் கன்னியர்கள்
மருவித்தடாகந் தனிலேவிளையாடல் வந்துகண்டு
முருகுநறுவனமணிக் குருகூரன் முதுகுருந்தின்
தருவினிதிற்றுகில் கவர்ந்துகொண்டேறினன் காக்கினன்றே.

(௫-பு.)—

இது, திருக்குருகூரில் ஆதிநாதசுவாமியுற்சவத்தில் குருந்தமர வாகனத்தின் சிறப்புணர்த்துவது. மூன்றுபாடல்களாகியது. இந்த ஏட்டின் பின்புறத்தில் ஆழ்வார் உற்சவத்துப் பத்தாவதுநாளில் வெட்டிவேர்ச்சப்பரத்தின் சிறப்புணர்த்தும் பாடலிரண்டு எழுதப்பட்டுள்ளன. 9-வது ஏட்டின் முன்புறத்தில் திருக்குருகூரிலுள்ள சேனைமுதலியார் விஷயமான தோத்திரச்செய்யுள் ஒன்று எழுதப்பட்டுள்ளது.

(d) கிருஷ்ணன்திருக்கோலக்கவிதை.
KRṢṆANTIRUKKŌLAKKAVITAI.

Fol. 10.

In praise of Ādināthasvāmi of Tirukkuruhūr who is adorned and made to appear like the figure of Kṛṣṇa in the festival celebrated at Tirukkuruhūr.

Contains 5 stanzas.

Beginning:

கிருஷ்ணன் திருக்கோலக்கவிதை.

கலித்துறை.

நாறுத[ற்](க்)கோலக்குழலாளசோதையென்னப்பிறுகஞ்
சீறுதற்கோபன்கெடுநாள்வெங்கானந்திரிந்தவுடம்
பூறுதற்கோகண்ணுறங்குதற்கேமணைணயுண்டவெதுப்
பாறுதற்கோவெண்டயிர்வாரிவாரியருந்தியதே. (க)

End:

விண்ணனைத்துந் தொழுமாலாதி நாதனைவீசுமழை
வண்ணனைச் சுந்தரத்தோ[ழ](ள)னைநான்குமறைத் தமிழ்ச்சொற்
பண்ணனைத் தென்குருகூரனை வண்டுபடர்கமலக்
கண்ணனைக் கண்டுகொண்டே னும்பர்நாடெங்கள் கைவசமே. (௫)

(கு-பு.)—

இது, திருக்குருகூர் ஆதிநாதஸ்வாமியின் உற்சவத்தில் கிருஷ்ணதிருக்கோலத்தின் சிறப்பைக்கூறுவது. இந்தப்பிரதியில் ஐந்துபாடல்களே உள்ளன.

(e) ஆதிநாதர்தண்டிகைக்கவிதை.

ĀDINĀTARDAṆḌIKAIKKAVITAI.

Fol 11.

In praise of the palanquin and palanquin festival of Ādinātha, a form of God Viṣṇu, worshipped in Tirukkuruhūr.

Contains 6 stanzas.

Beginning:

வெண்பா.

வண்டிகைக்குந் தண்டுளவ மாலே நின் சேவைக்குந்
தண்டிகைக்கும் வேறு தரமுண்டோ—கண்டிகைக்கும்
பெய்யம் புளகடலாம் பேருவகை யாலடியார்
மெய்யம் புளக மெழு மே. (க)

தண்டிகையி லேறிவருந் தாமோ தரக்கனியை
வண்டிகைக்குந் தண்டுளவ மாமுகிலைக்—கண்டு
பருகாத கண்ணும் பணியாத கையு
முருகாத நெஞ்சுமுள வோ. (உ)

End:

கலித்துறை.

விண்டிகைவாழிந்திரன் முதலோர்கள் விரும்பியவர்
கண்டிகையாமற் பரவியிப்பாரவர்[க்]காதலிப்ப
வண்டிகையார் கொங்கைப்பூங் கோதைநாதன் வருங்கனக
தண்டிகைசசேவைக் கெதிரிலைப்போற்ற முத்தாரணிக்கே (சு)

(கு-பு.)—

இதுவும் ஆதிநாதப்பெருமாளின் தண்டிகையுற்சவச்சிறப்பைப்பற்றியதே. ஆறுபாடல்களாலாயது.

(f) ஆதிநாதர்வாகனமாலை.

ĀDINĀTARVAHĀṆĀMĀLAI.

Foll. 12*a*—13*b*.

In praise of the different vehicles used in the course of the festival of Ādinātha, a form of Viṣṇu, worshipped in Tirukkuruhūr.

Contains only the benediction stanzas.

Beginning:

வாழி திருக்குருகூர் வல்லியார் நீடூழி
வாழி பொலிந்துநின்ற மாமாயன்—வாழிபசுந்
தண்ணிலஞ்சி மாலைத் தமனியக்குன் றென்னிரண்டு
கண்ணிறைந்த ஞானக் கடல். இதுவெண்பா. (க)

கலித்துறை.

திருவாழி யாழிப் பிரான்வாழி சேடத் திருப்புளிப்பூந்
தருவாழி கல்விச் சடகோபன் வாழி ததியர்க்கெல்லாங்
குருவாழி நாதமுனிவாழி தென்குருகூரிலின்னம்
பெருவாழி காரிப் பெருமானு நங்கைப் பிராட்டியுமே. (உ)

* * * *

End :

மாமாறன் பாதம் வழுத்துந் திருக்குருகூர்ப்
பாமாறன் வாழிமறைப் பாவாழி—யாமாறு
மூதூர் வழிதிறந்து முத்தியடி யார்ககருளும்
பூதூரன் வாழி பொலிந்து (எ)

(கு-பு.)—

இது, திருக்குருகூர் ஆதிநாதப்பெருமாள் திருவிழாவில் வாகனங்களின் சிறப்பை விளக்குவதெனத் தோற்றுகிறது. இந்தப்பிரதியில் வாழ்த்துப் பாடல்களேழுமட்டுமே யுள்ளன.

(g) ஆதிநாதர்சிங்காசனக்கவிதை.
ĀDINĀDARSIṄGĀSANAKKAVITAI.

Fol. 13. Fol. 14 is left blank.

In praise of the throne of God Adinātha of Tirukkuruhūr.

Contains 5 stanzas.

வெண்பா.

சந்ததம்வா னோர்போற்றத் தந்தச்சிங் காசனத்தில்
வந்து பொலிந்துநின்ற யாதவனைச்—செந்தமிழாற்
பாடிப் பணிந்து பரமபதத் தையென்றுந்
தேடித் தொழுவாய்நெஞ் சே. (க)
இந்திரனூர் போற்ற விலங்குபொற்சிங் காசனத்திற்
சந்திரகருமேக சாமளம்போல்—விந்தைபெற
வந்தகுரு காபுரிவா[ள்](ழ்)மாலாதி நாயகனைச்
சிந்தனையாய்ப் போற்று நன்னெஞ் சே. (உ)

End :

ஆதித்த மண்டலமோ வாடரா மண்டலமோ
வாதித்தபேரிதய மண்டலமோ—போதித்த
வந்தப் பொற்சிந்தை யகலாக் குருகூரன்
தந்தப்பொற் சிங்கா சனம். (ரு)

(கு-பு.)—

இது, திருக்குருகூர் ஆதிநாதப்பெருமாள் சிங்காசனச்சிறப்பை விளக்குவது. ஐந்துபாடல்களாலாயது.

இதன் 15-வது ஏட்டில்,

தளர்ந்தே கோ லூன்றுமட்டுந் தருணமட்டு(?)நீண்டு
வளர்ந்தேனுன் சிந்தித்து வாழ்ந்தேன்—செழுந்தேன்
துளிக்குமகிழ் மாலைச் சடகோபா குந்த
மளிக்குந் தருணமிது வாம்.

தளர்ந்தே னுனைப்பணிந்தன் தா[ழ்](ள்)தொழுதேன் செல்வம்
வளர்ந்தேன் சிறியனேன் வாழ்ந்துங்—களந்தேன் (?)
தென்குருகூர் மாறு தெரிசித்தே னென்னை விடாய்
நன்குபெறப் பண்ணுவது ஞும்.? என்னும் நம்மாழ்வார் விஷய

மான பாட லிரண்டுள்ளன. 16-வது ஏடு வெற்றேடு.

(h) வைத்தமாநிதிசுவாமிதிருப்பணிமாலை.
VAITTAMĀNIDISUVĀMITIRUPPAṆIMĀLAI.

Fol. 17.

Gives some account of the persons who built the different portions of the temple of Vaittamānidhipperumāḷ in Tirukkōḷūr.

Contains only 1 to 5 stanzas.

Beginning:

நீர்பூத்த மலர்த்தடஞ்சூழ் திருக்கோளூர் வைத்தமா
நிதிக்கன்பாகச்
சீர்பூத்து விளங்குகெர்ப்ப கிரகமுகத்தழகிய
திவ்வியவிமான
மேர்பூத்த நவமணியா லுண்டாக்கிப் பூசை
செய்தானெதிர்த்தோரஞ்சப்
போர்பூத்த பெருந்திறற்கு(ப்)பொன்வளந்
திகழளகை புரக்கும் வேந்தே. (க)
சன்[ன](னி)தியிற் கெருடேசன் வீற்றிருக்குங்
கோயிலுஞ் செந்தமிழ் நூல்வாய்த்த
வின்னிசையோர் கொண்டாடுஞ் சேனையர்கோன்
கோயிலுமுன் னியல்பாய்க் கண்டு
சென்னெல்வயற் புகுமூரார் திருவுளத்தின்
படிக்குமகா சிறப்புச்சேர்த்தான்
பொன்னுலவு தமிழளகாபதி(தனக்)கு(ப்)பொன்
வடபால் புரக்கும் வேந்தே. (உ)

End:

சோலைமலர்த் தடம்புடைசூழ் புகுமூராரகமகிழத்
தூய்தாமன்ன
சாலைமடைப் பள்ளியுநீ[ழ்](ள்)குடவறையு
மமைத்துமுது தமிழ்க்கோளூரிற்
பாலமதன் மேல்புறத்து நிலமும் விடுவித்து
வெகு பரிவுசெய்தான்
வேலையுலகம்புகழும் வரகுணமா மங்கையில்
மீனவர்கள் கோவே. (ரு)

உல . . . .

(கு-பு.)—

இது, திருக்கோளூர்வைத்தமாநிதிப்பெருமாள் ஸந்நிதி முதலியவற்றைக் கட்டுவித்தவர் பெயர் முதலிய வரலாற்றைத் தெரிவிப்பது. இந்தப் பிரதியில் முதலைந்து செய்யுட்கள் மட்டுமேயுள்ளன.

(*i*) வரமங்கைநாதன்துதி.

VARAMAṄGAINĀTANTUDI.

Fol. 18*a*. Fol. 18*b* is left blank.

A eulogy on Dēvanātha, a form of God Viṣṇu, worshipped in the shrine at Vānamāmalai.

Contains 1—3 stanzas.

* * * *

Beginning:

. . . .

அந்தணரைப் பெரியோரைப் பரமசிவனடியாரை யகந்தையாகச்
சிந்தைதனிலே நினைந்து மனதருகியன்பர் திதந்தேடுவோர்க்கு(ப்)
புந்திதனிலேயிருந்து நினைத்தவர[ம்](வ்)வைகுண்டம் புகுவர்தாமே. (க)

End:

உலகமெலா மோரடியா யளந்தநாதன்
    உண்பதந் ? தங்கள்மனது இக்குநாதன்
சிலையைய யுருவாக்கிவைத்த தேவநாதன்
    சிரீவர மங்கைக்குகந்த தேவநாதன்
அலைகடலில் பள்ளிகொள்ளவ [ழ](ளர்)ந்த நாதன்
    ஆயிரநாமம் தரித்தவாதி நாதன்
மலையெனவே வ[ழ](ளர்)ந்த வரமங்கை வாழும்
    வானுவர மலைநாதன் நாதன் தானே. (௩)

(கு-பு.)—

இது சிரீவர மங்கை (வானமாமலை) யென்னும் விஷ்ணு ஸ்தலத்தில் அமர்ந்துள்ள தேவ நாதன் என்னும் திருமால் விஷயமான தோத்திரம். இதில் மூன்று பாடல்களேயுள்ளன. முதற்பாடலின் முதலடி இந்தப் பிரதியில்லை.

R. No. 430.

Palm-leaf. 9½ × 1 inches. Foll. 138. Lines, 4 in a page. Tamil. Injured. Old.

Presented in 1919-20 by Sundarammā of Alwartirunagari.

(*a*) 𑌲𑌕𑍍𑌷𑍀𑌹𑍃𑌦𑌯𑌸𑍍𑌤𑍋𑌤𑍍𑌰𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌃.

LAKṢMĪHṚDAYASTŌTRAMANTRAḤ.

Fol. 1*b*.

See the Sanskrit part of the Triennial Catalogue.

(*b*) 𑌲𑌕𑍍𑌷𑍀𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌃.

LAKṢMĪMANTRAḤ.

Foll. 2*a*—4*b*.

See the Sanskrit part of the Triennial Catalogue.

(c) இலக்குமிவெண்பா.
ELAKKUMIVEṆBĀ.

Foll. 5*a*—138*a*.

A eulogy on Goddess Lakṣmī. The author's name is not given, but he appears to be a Vaiṣṇava. From the colophon it is made out that this work contains more than 218 stanzas.

Contains 136 stanzas.

Beginning:

திருவாசல் காப்புத் திறமினென் னெஞ்சென்று
முருவார்க்கா யில்காத் துறைவீர்—மருவாருந்
தாமரைப்பூ மேலிருப்பாள் தண்டுளவோன் மார்புறைவாள்
தூமலர்த்தாள் கண்டு தொழு. (க)

வரமங்கை யோகி மலர்க்கமலப் பொற்றாள்
சிரமங்கை சேர்த்திறைஞ்சல் செய்வேன்—பிரமன்
திருத்தாய் மால் மார்பி லுறை செல்விவாழ் வெல்லாம்
பெருத்தா ளருள்யான் பெற. (உ)

நீலமே கத்துள்மின்போல் நின்றன் றுலகளந்தான்
கோலமார் பிற்றிகழ்பூங் கொம்பனையாய்—ஞாலமெங்குங்
கூவினகாண் கோழிகுயில் கூர்ந்துறுங்கோன் பேர்பிதற்றல்
மேவினகாண் புட்குலம்வெவ் வேறு. (ங)

* * * *

Colophon:

பக்தனைச்சார்ந்தகவி அ முற்றும். மகாலக்ஷ்மி திருவாராதனக்ரமம் கவி 218 முற்றும்.

End:

நல்லறிவா ளர்க்கினிய நாரணன்மார் பிற்றிகழு
மெல்லியலே வாழ்வுதரு மெய்த்திருவே—சொல்லிவைத்தே
னன்பாற் றெழுமேனுன்னை யாராதி யேனுனீ
யென்பாற் பராமுகஞ்செய் யேல். (சா)

(கு-பு.)—

இது இலக்குமியின் தோத்திர ரூபமானது. வைணவமதத்தினரியற்றிய தெனத் தெரிகின்றது. செய்யுள் நடை சாதாரணமானது. இந்நூலினிறுதியி லுள்ள வாக்கியத்தால், இதில் வெண்பா இருநூற்றுப் பதினெட்டுக்கு மேலிருக்கவேண்டுமெனத் தோற்றுகிறது. இடையிடையே பல ஏடுகளில்லையாதலின் இதிலுள்ள வெண்பாக்கள் 136. நூலாசாரியர் இன்னாரென விளங்கவில்லை.

R. No. 431.

Paper. 11×9½ inches. Foll. 316. Lines, 20 in a page. Tamil. Good.

Transcribed in 1920-21 from a MS. of K. Lakṣmīnārāyaṇa Ceṭṭiyār of Pudunagaram, Cochin state.

கிட்கிந்தாகாண்டம், உரையுடன்.
KIṬKINDĀKĀṆḌAM WITH COMMENTARY.

The Kiṭkindākāṇḍam of Kambarāmāyaṇa with a commentary which, in some places, is elaborate and in other portions somewhat short. The name of the commentator is not given, but it appears that the commentator's native place is Pudunagaram in Cochin State.

Complete.

Beginning:

கிட்கிந்தையா காண்டம்.
(பம்பைப்படலம்.)

நாடியபொருள் கைகூடும் . . . . . கூறுவோர்க்கே.

இங்ஙனம் ஆரணியகாண்டம் ஒருவகையான் முடித்துக் கிட்கிந்தையர் காண்டம் கூறுவான் தொடங்கி முதற் செய்யுளால் கடவுளை வாழ்த்து கின்றார்.

(கலிவிருத்தம்)

மூன்றுரு வெனக்குண மும்மையா முதற்
றோன்றுரு வெவையுமம் முதலை சொல்லுதற்
கேன்றுரு வமைந்தவ ரிடையினின்றவர்
சான்றுரு வுணர்வினுக் குவந்ததாயினார்.

(எ-து) இதனைக் குண மும்மையான் மூன்றுருவென முதற்[றோ] (றோன்று)ருவுமம் முதற் சொல்லுதற்கேன்று அமைந்த வுருவெவையும் இடையினின்றவர் சான்றுரு வுணர்வினுக்கு உவந்ததாயினாரெனக் கூட்டுக.

(இ-ள்) முக்குணத்தின் விகாரப்பா[டலா](ட்டா)லுலகத்திற்கு முன்னே தோன்றிய மூவுருவங்களும், அம் மூவுருவங்களில் முதலாகச் சொல்லுதற் கேற்ற எல்லாவுருவங்களும், முற்கூறிய முக்குணத் தொழில்களின் நடுவா கிய தொழிலின்வழி நின்றொரொருவருருவங்களே. அவ்வொருவர் தம்புந் திக்கு வந்த அவதாரமாயினா ரென்றவாறு.

எனவே, மும்மூர்த்தியுருவங்களு மற்றுமெல்லா வுருவங்களு மளிக்குந் தொழிற்குத் தலைவராய் நின்ற நாராயணக் கடவுளுருவங்களே; அ[ன்னா] (ந்நா)ராயணக்கடவுள் இராமவதாரமாக விச்சையால் வந்தருளினாரென் பதாம்.

படைப்பளிப்பழிப்பென்னுந் தொழில்களை விரும்பிப்பிரமன் விண்டு சிவனென நிற்கின்றவன் நாராயணனொருவனுமேயென்று விண்டுபுராணங் கூறிய முறைமைதோன்ற மூன்றுருவென முதற்றோன் றுருவென்று, மந்திராதித்த வித்தை முதலாகிய வேதாந்தங்களினும், பகவனோதிய கீதை யினும் அவனுலகத்திற் கெல்லாம் அந்தர்யாமியென்னு முறைமை தோன்றவுருவமைந்த வெவையுமென்றும், அவனளிக்குந் தொழில்வழி நின்றானென்பது தோன்ற இடைநின்றவரென்றும், அவன் சீவகோடி களுக்கு இன்ப துன்பங்களை வினைவழியாற்றுய்ப்பிப்பதன்றி யாவரிடத்தும் வெறுப்பு விருப்பில்லா னென்பது தோன்றச் சான்றுருவென்றும் அவனிச் சையாலவதரிக்குமென்று புருஷஸூக்தத்தினுங் கீதையினு மோதிய முறை மைதோன்ற உணர்வினுக்கு வந்ததாயினாரென்றுங் கூறியவாறு கண்டு கொள்க.

குணங்களைக் கடந்த விண்டு மூர்த்தியையுங் குணவிகாரப்பாடுடையா னென்றீண்டுரைத்தது, அவனைக்குணத்தை யிச்சையாற்கைக்கொண்டத னென்றறிக. அவன் குணங்களைக் கடந்தவனென்பதுங் குணத்தை யிச்சை யாற்கைக்கொண்டானென்பதும் நாரதீய முதலிய புராணங்களாலறிக.

இவ்வாறவன் பெருமையைக் கூறவே வாழ்த்தியதாயிற்று.

அவனை வாழ்த்துதலாலிக்காப்பியத்தோடு இச்செய்யுளுங் குளகமாம். இதனுள் மூன்றுரு—மும்மூர்த்தி யுரு. மூக்குணம்—சாத்திக, ராசத தாமதம். முதற்றோன்று.ு வென்றது உ[ண] (ம்)மைத் தொகை. இ ை டயினின்றவ ரென்று – இராமா மனற்கு(?)ளிடையினின்றவரென்றுமாம்.

இனியங்ஙனங் கடவுளை வாழ்த்திப் பம்பையென்னும் வாவியினது சிறப்பை இருபத்தொரு செய்யுளாற் கூறுகின்றார்.

End:

மின்னெடுங் கொண்ட(ல்) தாளின் வீக்கியகழல் கொடார்ப்பக்
கன்னெடுந் தோற்றம்வானோர் கட்புலத் தெல்லைதாவ
அன்னெடுஞ் சிகரகோடிமகேந்திர மண்டந்தாங்கும்
பொன்னெடுந் தூணிற்பாதச் சிலையெனப் பொலியநின்றான்.

(எ-து) தனது பாதத்து வீரக்கழலொடு முழங்கத் தனது தோற்றந் தேவர் கண்ணுக்கு மெட்டாதாக . . . . தூணைக[வ]வும் மகேந் திரமலை அதற்குப் பாதச் சிலையாகவுந் தோன்றும்படி நின்றானென்ற வாறு. (உஎ)

மருத்தின்வேக[ண](ன்)மனே சமன்மாறருப்
பிரித்த விந்திரியன்மதி யின்பதி
விரித்த சீதைதன் சோகவி[ஞ] [நா]சனன்
அரித்திரட்கிறை தாடொழுவாமரோ. (உஅ)

Colophon:

மகேந்திரப்படலம் முற்றும்.

ஆகப்படலம் ௧௬ க்குத் திருவித்தம் ௲௫௬. தர்மபரிபாலன நாராயணன் செட்டியார் கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பனவர் றூற்கப்பட்ட இராமா யண கதை விருத்தத்துக்குப் பொருள்விளக்குவதரி தென்று பெரியோர்கள் சொல்லுவதாகிய கதைக்குத் தெரிந்தமாத்திரம் கிட்கிந்தாகாண்டம் ஒரு காண்டத்துக்கு உரை செய்து அதற்கு இலக்கணைச்சொல்லு மெழுதவேணு மென்று சொன்னபடியினாலே எழுதி முடிந்தது.

(கு-பு.)—

இது கம்பராமாயண கிட்கிந்தா காண்டத்தின் உரை. இவ்வுரை சில விடங்களில் விரிவாயும், சில விடங்களில் சுருக்கமாகக் கருத்துக்களை விளக்கி யும் எழுதப்பட்டுள்ளது. சிலவிடங்களில் இவ்வுரைகாரர் கூறும் கருத்துக் கள் மிக அழகாயிருக்கின்றன. இவர் பெயர் முதலியன தெரியவில்லை. கொச்சிராஜ்யத்தைச் சார்ந்த புதுநகரமென்பது இவரூராயிருக்கலா மென்று தோற்றுகிறது. இவ்வுரை இந்தப் பிரதியில் கிட்கிந்தாகாண்ட முழு மைக்கும் உளது.

R. No. 432.

Paper. 11×9½ inches. Foll. 15. Lines, 20 in a page. Tamil. Good.

Transcribed in 1920–21 from a MS. of Malayappiḷḷaikavirāyar of Alwartirunagari, Tinnevelly district.

மாறன்பிள்ளைத்தமிழ்.
MĀṞANPIḶḶAITTAMIḺ.

A kind of poem technically known as Piḷḷaittamiḻ written in praise of Māṟan, also known as Saint Śaṭhakōpa or Nammāḻvār, well-known as the author of Tiruvāymoḻi.

Incomplete.

Beginning:

தேனுருமகிழ்த் தொடையலு மௌலியுந்திருக்கிளர் குழைக்காதுங்
கானுறு மலர்த்திருமுகச் சோதியுங்கயிரவத்துவர்வாயு
மோனமாகிய வடிவமு மார்பமு முத்திரைத் திருக்கையு
ஞானதேசிகன் சரணதாமரையு மென்னயனம் விட்டகலாவே.

* * * *

சுவாமி ஆழ்வார் பிள்ளைத்தமிழ்.

கார்கொண்ட திருமேனிப் பசும்பொருப்பினூடுவே
கதிரெறிக்கு மின்போலக் குடியிருக்கு மொருத்தி
தார்கொண்ட முலையழுந்தித் தழும்பிருந்த மார்பத்
தனிப்பெரு நாயகக் கடவுள் சரணமலர் தொழுவாஞ்
சீர்கொண்ட மணிமாடந்திகழ் குருகூர் நங்கை
திருவயிறு வாழவந்ததிருக்குழவி மாறன்
பார்கொண்ட மறைநூலின் பயன்கொண்டு தமிழ்நூல்
பாடவல்ல பெருமாளைப் பராங்குசனைக் காக்கவே.

End:

அம்புலி.

சந்திரபுட்கரணியிடை யென்று நீசேர்கின்ற
தவநிலைக்கருள் செய்தவத்
தம்பிரானைப் பழையவும்பர் நாயகனை மெய்த்
தமிழ்பாடு மவனிவன்கா,
ணிந்திரற் கரியகிரிப்பரமரிவனோது
மியலுக்கு மயலாகிவந்
-திந்தப் புளித்திருவிலைக்கொருவராய் நின்ற
தின்ன நீயறியாய் கொலோ,
மந்தரப் புவிவாழ ஞானமுத்திரைகொண்டு
வந்தவதரித்த வொளிகாண்
மறையைப்பிழிந்து திரையமுதொழுகுகவிபாட
(வந்த) பெருமாளிவன்கா,
ணந்தரத்திடையிழிந்தரு குவந்துளமகிழ்ந்
தம்புலீயாடவாவே
யாழ்வார்கள் தம்பிரா னெம்பிரானுடன் மகிழ்ந்
தம்புலீயாடவாவே. (க)

(கு-பு.)—

இது தமிழ்வேதமாகிய திருவாய்மொழியைச் செய்தருளிய நம்மாழ்வார்மீது பாடப்பெற்ற பிள்ளைக்கவி. பிரபந்தவகைகளிலொன்று. பத்துப் பருவங்களையுடையது. இந்தப்பிரதியில் முதல் ஆறுபருவங்களும் ஏழாவது பருவத்தின் முதற்செய்யுளுமேயுள. ஆதலால் அபூர்த்தியாகவுளது. இஃது அச்சிடப்படவில்லை.

R. No. 433.

Paper. 11 × 9½ inches. Foll. 12. Lines, 20 in a page. Tamil. Good.

Transcribed in 1920–21 from a MS. of Vaḍamalainambi Ceṭṭiyār of Pudunagaram, Cochin state.

நவநீதப்பாட்டியல்.
NAVANĪTAPPĀṬṬIYAL

A work in verse in Kaṭṭaḷaikalitturai metre, laying down the general poetic conditions to be satisfied in the composition of the Tamil Prabandhas: by Navanītan. The work is divided into three sections, viz., Mudanmoḻi, Seyyuḷmoḻi and Podumoḻi. The work is printed, but in the printed edition only 24 stanzas belonging to Mudanmoḻi are found.

Complete in 102 stanzas.

Beginning:

நவநீதப்பாட்டியல்.

கார்கொண்டமேனிக் கறைகொண்ட நேமிக்கமலக்கண்ணன்
பார்கொண்ட பாதத்தையேத்திப் பகருவன்பாட்டியலைத்
தேர்கொண்ட வல்குற்றுடி கொண்டசிற்றிடைச் செந்துவர்வாய்
வார்கொண்ட பூண்முலைவேல் கொண்ட வாள்விழிவாணுதலே. (க)

மங்கலஞ் சொல்லெழுத்தொன்றியசானம் வருமிருபாற்
பொங்கியவுண்டிவருணம் பகுத்திடு நாட்பொருத்தந்
தங்கிய நாற்கதி யெண்கணமென்று தமிழ்தெரிந்தோ
ரிங்கிவைபத்து முதன் மொழியா மென்றியம்பினரே. (உ)

End:

இறப்பவுயாவிறப்ப விழிய விசைகருஞ் செய்யுட்
டிறத்தன யாவையுந் தீதென்றுரைப்பர் செய்யாதொழிந்த
வுறத்தளவாயினுந் தொன்னூன் முறைமை யுறழுப்(படு)
நிறத்திற் குவளையுங் காவியும் போன்ற நெடுங்கண்ணியே, (ாக)

Colophon:

ஈட்டிய வெண்ணெண் கலையோடியலிசை நாடகமுங்
காட்டிய போதக்குறு முனியாதி கலைஞர் கண்ட

பாட்டியலானவை யெல்லாந் தொகுத்துப் பயன்பெறவே
நாட்டிய வேதத்தவனரு நீதநடனென்பவே. (௭௪)

நவநீதப்பாட்டியலெழுதி முடிந்தது.

முற்றும்.

(கு-பு.)—

இது பிரபந்தங்கள் பாடு முறையையும் அவற்றிற்குரிய பொருத்த முதலிய இலக்கணங்களையுந் தெரிவிப்பது. கட்டளைக் கலித்துறையாலாயது. முதன் மொழி, செய்யுள் மொழி, பொது மொழி என மூன்று பகுதியுடையது. இதிலுள்ள கலித்துறைகள் 102 அச்சுப் பிரதியில், இதன் முதற் பிரிவினுள் 24 செய்யுட்களேயுள்ளன. அவற்றிலும் பாடபேதங்கள் மிகவுள. இதனையியற்றியவர் பெயர் நவநீதன் என்பர்.

R. No. 434.

Paper. 11 × 9½ inches. Foll. 27. Lines, 20 in a page. Tamil. Good.

Transcribed in 1920–21 from a MS of Vaḍamalainambi Ceṭṭiyār of Pudunagaram, Cochin state

கதம்பக்கோவை.

KADAMBAKKŌVAI.

A collection of 252 stanzas taken from various poems, viz., Tiruvārūrkkōvai, Tirucirrambalakkōvai, Tañjaivāṇakkōvai, Kapparkkōvai, Kūdārkkōvai, Asadikkōvai, Puliyūrkkōvai, etc., most of these Kōvai having been printed. Some stanzas in this MS. contain mistakes and some contain differences in the readings.

Beginning :

வெள்ளைக் கலையுடுத்து வெள்ளைப் பணிபூண்டு
வெள்ளைக் கமல (மேல்) வீற்றிருப்பாள்—வெள்ளை
யரியா சனத்திலரசரோ டென்னைச்
சரியா சனத்தில் வைத்த தாய்.

கதம்பக்கோவை.

தேர்கொண்ட காமன் கவிகையும் வேழமுஞ்செஞ்சிலம்பும்
(போர்கொண்ட வம்பு மகுடமுங்) கொண்டொரு புற்றிடத்தே
வேர்கொண்டிருப்பவரா ரூரர்வீதிவிடங்கர் வெ(ற்பிற்)
(கார்கொண்டகாவி) லொரு பசுந்தோகை யென்கண்ணுற்றதே. (௧)

திருவாரூர்க்கோவை.

குலைகொண்ட . . . வாபுலியூரிற் றுவடத்தே நறைவெ . . . .
(சிலை)கொண்டுவாளிகொண்டம் போருகங்கொண்டு தேனுங்கொண்டு
கலைகொண்டு வேய்கொண்டு செங்காந்தள்கொண்டு கமுகங்கொண்டு
மலைகொண்டு வள்ளைகொண் டின்பான கொம்பொன்று வாழ்கின்றதே. (௨)

End:

முகத்தைத்துடைத்துப் பெருமூச்செறிந்து முலை[களு](க்கழு)து
வ[குத்தை](யிற்றைக்) குழைத்து வருமையனே மயில்வாகனனே[ர[(ன)
செகத்திற் றுதிக்கின்ற தென்னவராயனைச் சேவகனே
அகத்துக் கழைத்துவந்தாற் றருவேன் முலையாரமுதே. (உருக)

சதிராக்கிநந்தி பாமனைக்கூடிய தையலரை
யெதிராக்கி யென்னை யிளந்தலையாக்கி யிருள்குழலை
அதிராக்கி மேனியழுக்காக்கிப் பின்னுமங்காடிக்கிட்ட
பதராக்கி யென்னையும் பற்றுசை நீக்கியபாலகனே. (உருஉ)

(கு-பு.)—

இதில் திருவாரூர்க் கோவை, திருச்சிற்றம்பலக்கோவை, தஞ்சைவாணன் கோவை, கப்பற்கோவை, கூடற்கோவை, அசதிக்கோவை, புலியூர்க்கோவை முதலிய பல கோவைகளிலிருந்து தொகுக்கப்பட்ட 252 செய்யுள்களுள. இக் கோவைகளுட் பெரும்பாலன அச்சிடப் பெறுதன. இப்பிரதியிலுள்ள செய்யுட்களுட் சில பிழையுள்ளனவாயும், சில பிரதிபேதமுள்ளனவாயும் இருக்கின்றன. இறுதியிற் சில செய்யுட்கள் கோவைச் செய்யுளல்லாத தனிப் பாடல்களாகத் தோற்றுகின்றன. அவை தாழ்ந்த நடையாவாயவை.

R. No. 435.

Paper. 11 × 9½ inches. Foll. 75. Lines, 20 in a page. Tamil. Good.

Transcribed in 1920–21 from a MS. of Malayappiḷḷai Kavirayār of Ālwartirunagari, Tinnevelly district.

இறையனாரகப்பொருளுதாரணச்செய்யுட்கள்.

IṞAIYANĀRAHAPPORUḶUDĀRAṆACCEYYUṬKAḶ.

Illustrative stanzas to the various themes or topics dealt with in the Ahapporuḷ of Iṟaiyanār, which work is described under No. 40 of D.C.T. MSS., Vol. I. Most of these stanzas are taken from Tamil classical works and a list of these works are given at the end after the extracts.

Imperfect.

இறையனாரகப்பொரு[ள்த்து](ட்டு)றைக்குச் சங்கச்செய்யுளாக
வுதாரணமெழுதியது.

உரியவேனு வனத்தெல்ல ? வெளியினூடு தோன்றி
யுலகமெலாம் போற்றுங், கரியமாணிக்க மல்லாத
வேய்முத்த[ர]ங்கையினுலுந் தொடோமுறுகண்ணதாய்
விரியுமொட்டுமுத்துளன குறமான்முலைவிலைக்கு
நேரொா(க்)குமோரணபனே விடை, யரியராவின்மடிக்கீழ்க்
கிடந்தபொன்மாணிக்கந்தரில் வாங்குவாரி(ல்)லையே.

*   *   *   *

பூமருகண்ணிணை(வண்டாப் புணர்)மென் முலையரும்பாத்
தேமரு செவ்வாய் தளிரா(ச்) செருச்சென்னிலந்தைவென்ற
மாமருதா(னை யெங்கோன்வை)யைவார் பொழிலேர்மணந்த
காமரு பூங்கொடி கண்டே களித்த வெங்கண்ணிணையே.

(பாண்டிக்கோவை).

* * * *

தொடிவானரம(ங்)கை யன்றிமைக்குங்கண்கள் தோயுதிலத்
தடிவானரந்தமலரும் புலருமயன்தலையைத்
தடிவானரன் . . . . . தாழ்சடையோன் தில்லைப்பூசல்வல்லிக்
கொடிவானரம்புரியும் பொழில்வாய்ந்த கோல்வளையே.

(தில்லையந்தாதி).

End:

நாளைவரகுணர்கோ னுங்கையிலே தங்கலா
மீ[ழு](ளு) மமரும் விடிந்துபோ—நீளமுமோ
ரம்பிட்டெயுந்தூரமில்லூ ரயில்வே[ல](ற்கட்)
கொம்புக்குங்காலர்றக்கொண்டு. (பழம்பாட்டு).

* * * *

நீயுமிவளுமின்றேசென்று சேர்தி(ர்)நெல்வேலியொன்னார்
தேயும்படிசெற்றதென்னவன் (றென்)புனனூட்டிளையோர்
வாயுமுகமுமலர்ந்த கமலமணி(த்தடத்துப்)
[ே]பா[ய](யு)ங்கயலவர்கண்போற் பிறழும்பழனங்களே.

(பாண்டிக்கோவை).

வில்லார்நுதலியுநீயு மின்றேசென்றுமே[ா]வுதிரு
நெல் . . . .
. . . .
. . . .

* * * *

துணைவனெனும்பெயர் : தோழனுங் கணவனுந்
துணைவனென்றாகும் . . . . . .

படையின் பெயர் : தாரே தண்டம் அனீகம் அநீகினி, தானை பதாதி பதாகினி, யூபம், பாணியதிகம் பாடி பகுதி.

Colophon:

இறையனாரகப்பொருள் துறைக்குச்
சங்கச் செய்யுளாக வுதாரணமாக
வெழுதியது முற்றும்.

முன்பின் சோர்ந்துபோயிருப்பதினாலே விசாரித்
தெழுதிவைக்க வேண்டியது.

(கு-பு.)

இதில் இறையனாரகப்பொருட்டுறைகளுக் கிலக்கியமாகக் காட்டப்பெற்றுள்ள பழைய செய்யுட்கள் சுமார் 400 க்கு மேல் உள்ளன. இவை பல கோவைகளினின்றும், எட்டுத் தொகையுட் சிலவற்றினின்றும் வேறு சில பழைய நூல்களிலிருந்தும் தொகுக்கப்பெற்றவை. தனிப்பாடல்களும் சிலவுள. இவற்றைத் தொகுத்தவரின்னாரென்றும், அவர் கால முதலியனவும் புலப்படவில்லை. பிரதியில் எழுத்துப் பிழைகள் அதிகம். இடையிடையே விடப்பட்டுமுள்ளது.

இதில் வந்துள்ள நூல்களின் பெயர்கள் வருமாறு—

(1) திருக்கோவை.
(2) பாண்டிக்கோவை.
(3) கிளவித்தெளிவு.
(4) கிளவிமாலை.
(5) குறுந்தொகை.
(6) பொருளியல்.
(7) சிற்[றெ]ட்டகம்.
(8) பலசந்தமாலை.
(9) அகத்திணை.
(10) கிளவிவிளக்கம்.
(11) நற்றிணை.
(12) நெடுந்தொகை (அகநானூறு).
(13) கண்டனலங்காரம்
(14) கோயிலந்தாதி.
(15) வங்கர்கோவை.
(16) நந்திக்கலம்பயம்.
(17) சிலப்பதிகாரம்.
(18) ஐங்குறுநூறு
(19) ஐந்திணை.
(20) நறையூரந்தாதி.
(21) வெண்பாமாலை.
(22) மழவைஎழுபது.

R. No. 436.

Paper. 11 × 9½ inches. Foll. 144. Lines 20 in a page. Tamil. Good.

Transcribed in 1920-21 from a MS. of M.R.Ry. Vaḍamalainambi Ceṭṭiyār Avargaḷ of Pudunagaram, Malabar.

கணக்கதிகாரம், உரையுடன்.

KAṆAKKADIKĀRAM WITH COMMENTARY.

Same work as that described under R. No. 199(*c*) ante.

Complete.

(கு-பு.)—

இந்நூல் மூவருடத்துக் காட்லாக்கின் 199(a) நம்பரில் வந்துள்ளதேயாயினும், இந்தப் பிரதி அதனினும் விரிவாகவுள்ளது. இது பூர்ணமாகவிருக்கிறது.

R. No. 437.

Paper. 11 × 9½ inches. Foll. 56. Lines, 20 in a page. Tamil. Good.

Transcribed in 1920-21 from a MS. of Lakṣminārāyaṇa Ceṭṭiyār, Puduagaram, Malabar.

செய்யுளியல் மூலமும், உரையும்.

SEYYUḶYIAL WITH COMMENTARY.

The work forms the 4th part of the Poruḷadikāram of the Ilakkaṇaviḷakkam which is a work on Tamil grammar. By Vaidyanātha-dēśikar who also wrote the commentary under notice. The author lived in Tiruvalur about more than 250 years ago. Although the work is printed, there are one or two additional Sūtras in this manuscript in addition to variations in the commentary.

Contains Sūtras 30 complete with commentary, the 31st being incomplete.

Beginning:

சுயம்பிரகாசச் சோதியை வணங்கி
யியம்புவன் செய்யுளி யலைவிரித்தே.

என்பது சூத்திரம். இவ்வோத்துச் செய்யுளதியல்புணர்த்திற்றாகலாற் செய்யுளியலென்னும் பெயர்த்து. இதனுளித்தலைச் சூத்திரம், வழிபடு தெய்வவணக்கமு மதனாற் கூறப்படு பொருளு முணர்த்துவதாகிய சிறப்புப்பாயிரங் கூறுகின்றது; "வணக்கமதிகாரமென் றிரண்டுஞ் சொல்லச், சிறப்பென்னும் பாயிரமாம்" எ-ம், "தெய்வவணக்கமுஞ் செயப்படுபொருளு மெய்தவுரைப்பது தற்சிறப்பாகும்" எ-ம் கூறுபவாகலின்.

(இதன்பொருள்)—இயல்பாகத்தானே சோதிப்பிரகாச வடிவா யெழுந்தருளியிருக்கின்ற பொருளைத் தொழுதியான் செய்யுளதிலக்கணத்தை விரித்துக் கூறுவே னென்றவாறு.

விரித்தே யென்றதீண்டூற்றசையேகாரம் '(தேற்றம் வினாவெண் பிரிநிலை யெதிர்மறை, யீற்றசையெனவாறே காரம்மே)' என்பவாகலின். (க)

செய்யுளென்பது தெரிவுறக் கிளப்பிற்
பல்வகைத் தாதுவி னுயிர்க் குடல்போற்பல
சொல்லாற் பொருட்கிடனாக வுணர்வினின்
வல்லோரணிபெறச் செய்வன செய்யு
ளென்றுகூறிய வியல்பிற்றாகி
யெழுத்தசை சீர்தளையடி தொடையென்ற
மூவிரண் டுறுப்பு மேவரச் சிவணிப்
பாவுமினமு மெனவிரு பாற்றே.

இது, மேலியம்புவனென்ற செய்யுளதிலக்கணத்திற் செய்யுட்குப் பொதுவிதியும், அஃதித்துணையுறுப்பிற்றாயித் துணைத்தாமென்பதூஉங் கூறுகின்றது.

End:

சுரிதகமிடையிடைவந்த கொச்சகச் செய்யுளும் வெண்பாவினோடு மாசிரியத்தினோடு மயங்கிவந்த மயங்கிசைக் கொச்சகச் செய்யுளும் வந்துழிக் காண்க.

இன்னும், மரபென்ற மிகையானே, தரவொரு போகு முதலாகவுடையன வெல்லா மதனாற் பெயர் கொடுத்துக் கொச்சக வொருபோகென்று வழங்கப்படும். "தரவின்றாகித் தாழிசை பெற்றுந்,தாழிசையின்றித் தரவுடைத்தாகியு மெண்ணிடையிட்டுச் சின்னங்குன்றியு, மடக்கியலின்றி யடிநிமிர்ந்தொழுகி

யும், யாப்பினும் பொருளினும் வேற்றுமையுடையது கொச்சக வொரு போகாகுமென்ப " என்றாசிரியர் தொல்காப்பியனாரும். " கூறிய வுறுப் பிற் குறைபாடின்றித், தேறிவிகற்பிற் றேவபாணியுந், தரவே குறையினுந் தாழிசை குறையினு, மிருவகை முத்திறத்தெண்ணோ நீங்கினு, மொரு போ கென்ப வுணர்ந்திசினோரே " என நற்றத்தனாரும் பிறருங் கூறுபவாகலின் அவற்றின் இலக்கியமும் பிறவும் யாப்பருங் கலவிருத்தியுட் கண்டுகொள்க.

அடியெனைத்தாகியு மொத்துவந்தளவினிற்

கடையடி மிகுவது . . . .

(கு-பு.)—

இது இலக்கண விளக்க மென்னுந் தமிழ் இலக்கண நூலின் ஒரு பகுதி யாகிய செய்யுளியலாகும். இந்நூல் பிரசித்தமானது ; அச்சிடப்பட்டிருக்கி றது. எனினும் இந்தப் பிரதியில் இரண்டொரு சூத்திரம் அதிகமாகவும், உரையில இடையிடையே சில பாடபேதங்களுமுள்ளன. இவ்வியலின் சூத்தி ரம் ருக. இந்தப் பிரதியில் ௯0 சூத்திரங்கள் முழுதும் உரையுடனும் ௯௧- வது சூத்திரம் அபூர்த்தியாகவுமுள்ளன. ஆதலால் இது முற்றுப் பெற வில்லே. இந்நூல் மூலம், உரையாகிய விரண்டையுஞ் செய்தவர், சுமார் 250 வருஷங்களுக்கு முன் திருவாரூரிலிருந்த வைத்தியநாத தேசிகரென்ப வர்.

R. No 438.

Paper. 11 × 9½ inches. Foll. 54. Lines, 20 in a page. Tamil. Good.

Transcribed in 1920–21 from a MS. of Vaḍamalanambi Cetṭiyār of Pudunagaram, Malabar.

ஹோரா சாஸ்திரம்.

HORĀŚĀSTRAM.

A rendering in Tamil of the Sanskrit Brahatjātaka of Varāhamihira : by Iḷinga, a trader by birth, whose native place was Pudunagaram in the Malayalam country.

Complete.

Beginning :

நன்றாக.

வராகரோரை சாஸ்திரம்.

பூங்கொன்றை மாலேவேய்ந்த புண்ணிய மூர்த்தி தந்த
தூங்கலின் வதனப்பிள்ளே சோமனைக் கோடென்றெண்ணி
யாங்கதை(ப்) புழைக்கைபற்றி யன்புறவிணைத்து நோக்குந்
தேங்கமழ் களிற்றின் செய்ய சேவடி சென்னிவைப்பாம்.
ஸ்ரீவெங்கடாசலபதி ரெங்கராயர் திருவடித்தாளே சரணம். (க)
உலகெலாம் பூத்துக் காய்த்து நித்தலு முடையோனாகி
நிலவுறு மூ[ற](ர்த்) தியாகிப் பிறப்பிறப்பிலனாய் நின்ற
வலகறு சோதியாகி யனுமுத லெவையுமாகிக்
கலேகளின் முடிவாய் நின்ற கதிரினைச் சிந்தைசெய்வாம் (உ)

* * * *

இசைபிரதம மாமோரைக் கிராசியாதி பனேயாகும்
அசைவிலா விரண்டா மோரைக்கிவ(ர)பேசனதிபனாகு[ம்]
முசிவறு திரேக்காணே சன்முன்னமெ வியேசனந்த[ம]
மிசையுறு மிலாபமாள்வோன் அதிபனமெனவிளம்பே. (கஉ)

End:

குருவே துணை.

மடுவிடந்தனிற் புயங்கஞ் சுற்றிய வடிவனுகிக்
கடிய வத்திரயில்லாதே வனத்தினிற் கள்வர்தன்னுற்
படியினிலங்கி தன்னுற் பாவகமுறு மொருத்தன்
கடிகமழ் குழலாய் மீனங்கடைத் திரேக்காணமாமே.

Colophon:

மாவியன் மறைவலோர் முன்வகுத்திடும் வடநூல்தன்னைத்
தேவர்க்குங் காலமோர்வான் செப்பினன் வராகனென்போன்
நாவலன் வணிகர்தம்மில் நல்லவினரு ளிலிங்கன்
ருவிய புவியின்மீதே தமிழினிற் சாற்றினுனே. (நஎ)

*　　*　　*　　*

ஆக விவ்வத்தியாய மறைந்தன விருபத்தைந்தும்
ஓலையாலிந்நூல் தன்னை யுணர்ந்துல கோர்க்குணர்த்திற்
போகமா முலகுதன்னிற் கதிரெனப் புகழின்வாழ்ந்து
ஏகமாய்ப் பிரமமாகி யின்ப முற்றிடுவரன்றே. (சமக)

ஆக அத்தியாயம் உடுக்கு கூடிய விருத்தம், சள.

சகரவாண் . . னூற்றிற் சார்ந்திடு மைம்பத்தைந்தின்
பகர்தரு தைப்பூசத்திற் பனையுறுந் தாமனுட்டில்
புகல்தரு புத்தூர்தன்னிற் புகழுடை நல்லவன்றன்
மகவெனு மிலிங்கனுரை வகுத்தரங் கேற்றினுனே.

The scribe adds:—

